ஜூலை 2014 July | இதழ் 282 ISSUE

# தமிழர் தகவல்

## TAMILS' INFORMATION



ஆஸ்திரேலியா திருக்குறள் மாநாடு



இலக்கியத் தோட்ட விருதுகள்




ஒன்ராறியோ அரசின் மதிப்பளிப்பு

24 வது ஆண்டில் th Year

Growing with the Community ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

# வாராது வந்துள்ள வாய்ப்பு!

என்றாவது ஒரு நாள் இது நடைபெறுமா என்று எதிர்பார்த்திருந்த எம்மவர்க்கு, ஏமாற்றமளிக்காமல் அது நடைபெற்றுள்ளது.

முள்ளிவாய்க்கால் அவலத்தின் ஐந்தாண்டு நிறைவின் பின்னராவது ஓரளவுக்கு விடயம் ஒப்பேறியிருக்கிறது என்ற மனத்திருப்தி இதனூடாக எமக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசின் இனவழிப்பு, இனப்படுகொலை, போர்க்குற்றம், மனித உரிமை மீறல், மனித குலத்துக்கெதிரான நடவடிக்கை என்கின்ற எல்லாவற்றையும் சேர்த்து 'உண்மையை உண்மையாகக்' கண்டறிய, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் அதன் கதவுகளைத் திறந்திருப்பது ஒருவகை ஆறுதலைத் தருகின்றது.

2012, 2013, 2014ம் ஆண்டுகளில் அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் இறுதி வடிவமாக, சர்வதேச சுயாதீன விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதத்தில் ஆரம்பமாகும் இதன் விசாரணை அடுத்தாண்டு ஏப்ரலில் முடிவுறும்.

மிகவும் நிதானமாக, நேர்மையுடனும் துணிச்சலுடனும் தமது பணியை நிறைவேற்றி முடித்து, ஆணையத் தலைமைப் பதவியிலிருந்து ஓய்வுபெறும் நவநீதம் பிள்ளை அம்மையாரை வாழ்த்தி விடையனுப்புவோமாக!

அவரால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் வெளியக ஆலோசனை நிபுணர்கள் மூவரும் தங்கள் கடமையை ஆரம்பித்துள்ளனர்.

நியுசிலாந்தின் கவர்னர் ஜெனரலாகவும், உயர் நீதிமன்ற நீதிபதியாகவும் கடமையாற்றிய சில்வியா கார்ட்ரைட், பின்லாந்தின் முன்னாள் அதிபரும் சமாதான நோபல் பரிசு பெற்றவருமான மார்டி அதிசாரி, பாகிஸ்தான் மனித உரிமைகள் ஆணையக முன்னாள் தலைவர் அஸ்மா ஜஹாங்கிர் ஆகிய மூவரும் சவால் நிறைந்த இப்பணியை ஆற்ற முன்வந்துள்ளதை வரவேற்கின்றோம்.

துறைசார் வல்லுனரான சன்ட்ரா பெய்டாஸ் அம்மையார் விசாரணைக் குழுவின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டமை மிகப் பொருத்தமானது.

இக்குழு நியமனத்தை அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியன வரவேற்றுள்ளன. ஆனால் இலங்கை அரசு தனது ஒத்துழையாமை முடிவை மாற்றாது மேலும் இறுக்கமாக்கியுள்ளது.

இவ்வேளை, விசாரணைக் குழு முன்னால் சாட்சியமளிப்போர் சட்டப்படி தண்டிக்கப்படுவர் என்ற பயமுறுத்தலை இலங்கை அரசு பகிரங்கமாக விடுத்துள்ளது.

விசாரணைக் குழு நிபுணர்களின் தகுதிகாண் தெரிவைக்கண்டு மகிந்த தரப்பு அஞ்சுகிறது என்பதையே இது காட்டுகின்றது. எனவே எச்சரிக்கையைக் கண்டு தமிழர்கள் பயப்பட வேண்டியதில்லை. பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அதனை எங்கும் எப்போதும் எடுத்துக்கூறும் உரிமை உண்டென்பதை மறக்கக்கூடாது.

முக்கியமாக, புலம்பெயர்ந்த தமிழர் இந்த விசாரணையை எவ்வாறு பயன்படுத்தப் போகின்றனர் என்பதையே சர்வதேசம் எதிர்பார்த்திருக்கிறது.

இப்படியொரு சந்தர்ப்பம் இன்னுமொரு முறை வருமென உறுதிகூற முடியாது.

இது, வாராது வந்துள்ள வாய்ப்பு! காற்றுள்ள போதே தூவுவோம்!

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information
Centre (ETHIC) of Toronto &
Thamil Information
Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and
Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்ராறியோவின் புதிய லெப்டினன்ட் கவர்னர் எலிசபெத் டௌட்ஸ்வெல்



ஒன்ராறியோ மாகாணத்தின் புதிய லெப்டினன்ட் கவர்னராக பிரபல சுற்றுச்சூழல் ஆர்வலரும் துறைசார் நிபுணருமான எலிசபெத் டௌட்ஸ்வெல் நியமனமாகியுள்ளார். இதற்கு முன்னர் ஏழு வருடங்களாக இப்பதவியை வகித்த முன்னாள் ஊடகவியலாளரான டேவிட் ஒன்லி கடந்த மாதம் 26ம் திகதி ஓய்வு பெற்றதையடுத்துப் புதிய நியமனம் இடம்பெற்றது.

ஐரிஷில் பிறந்து 1947ல் கனடாவுக்குப் பெற்றோருடன் வந்து குடியேறி, பட்டம் பெற்று பாடசாலை ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்த எலிசபெத், உள்நாட்டில் பல உயர் பதவிகளை வகித்ததுடன், சர்வதேச ரீதியாகவும் பதவிகள் பெற்று பிரபல்யமாக விளங்கியவர். ஐக்கிய நாடுகள் சபையில் சுற்றுச்சூழல் விவகார நிபுணர் பதவியும் வகித்தவர்.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் உதவிச் செயலாளர் பதவியுடன் சுற்றுச்சூழல் நிகழ்ச்சித் திட்டத்தின் நிறைவேற்று இயக்குனர் பதவியையும் வகித்த முதலாவது பெண்மணியும் இவரே.

கனடிய அரசாங்கம் அல்பேர்ட்டா மாநில எண்ணெய்வள விவகாரத்தைக் கையாளும் நடைமுறையைக் கண்டித்து, தொடர்ச்சியாக விமர்சனம் எழுப்பி வரும் சுற்றுச்சூழலியலாளரான எலிசபெத் டௌட்ஸ்வெல் அவர்களை, புதிய லெப்டினன்ட் கவர்னராக பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் நியமித்தமையை ஒரு திருப்பு முனையாகப் பலரும் விமர்சிக்கின்றனர்.

அல்பேர்ட்டாவின் எண்ணெய்வள அபிவிருத்தத் திட்டமானது, நீர்வளம் - வனவிலங்குகள் பாதுகாப்பு - சுற்றாடல் ஆகியவற்றுக்கு மோசமான தீங்கு விளைவிக்குமென்று எச்சரிக்கை செய்து வருபவராக இவர் விளங்கி வருகிறார்.

## பாரிய மாற்றங்களை உள்ளடக்கிய கனடிய புதிய பிரஜாவுரிமைச் சட்டம் (சி-24) இறுதி அங்கீகாரம் பெற்றது!

## Reforms to the Canadian Citizenship Act Received final passage and Royal Assent

கனடாவின் புதிய பிரஜாவுரிமைச் சட்டத்துக்கு கனடாவின் முடிக்குரிய அங்கீகாரம் கிடைத்துள்ளதாக குடிவரவு பிரஜாவுரிமைகள் அமைச்சர் கிறிஸ் அலக்ஸாந்தர் கடந்த மாதம் 19ம் திகதி அறிவித்தார். பாரிய மாற்றங்களை உள்ளடக்கிய இந்தப் புதிய சட்டம் சில மாதங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டதை அடுத்து விண்ணப்பக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது தெரிந்ததே.

புதிய குடிவரவாளர்கள் கனடாவின் விழுமியங்களை ஏற்று மதிப்பவர்களாகவும் சிறந்த கனடியர்களாகவும் வாழுவதற்கு ஏற்ற வகையில் புதிய சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதிய சட்டம் அமுலாகும் பட்சத்தில் 2015-2016ம் வருடங்களில், தற்போது தேக்க நிலையிலுள்ள பிரஜாவுரிமை விண்ணப்பங்களில் சுமார் எண்பது வீதமானவை குறைவடையுமென்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

கனடிய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பம் செய்பவர்கள் கனடாவில் வசித்திருக்க வேண்டிய ஆண்டுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளமையும், கனடிய உத்தியோகபூர்வ மொழிகளில் புலமை பெற்றிருக்க வேண்டியது அவசியமென்பதும் புதிய சட்டத்தின் முக்கியங்களில் ஒன்றாகும். இது பற்றிய விபரம் வருமாறு:

* 14 வயதுக்கும் 64 வயதுக்குமிடைப்பட்டவர்கள் கட்டயமாக மொழித்தேர்வுப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். கனடாவின் இரண்டு உத்தியோகபூர்வ மொழிகளான ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியில் நடத்தப்படும் பரீட்சையில் இவர்கள் சித்தியடைய வேண்டும். முன்னர் இந்தத் திட்டம் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு விதிவிலக்கு அளித்திருந்தது.

* பிரஜாவுரிமைக்கு விண்ணப்பம் செய்யும் ஒருவர், அதற்கு நேரடியாகவுள்ள ஆறு ஆண்டுகளில் மொத்தம் நான்கு வருடங்கள் கனடாவுக்குள் இருந்திருக்க வேண்டும். அதாவது, நேரடியான முன்னைய 2190 நாட்களில் கனடாவுக்குள் 1460 நாட்கள் இருந்திருக்க வேண்டும். அத்துடன், குறிப்பிட்ட ஆறு வருடங்களில் நான்கு வருடங்களுக்கு தலா 183 நாட்களுக்குக் குறையாது கனடாவுள் இருந்திருக்க வேண்டும்.

* Requiring 14-64 year olds to meet knowledge and language requirements provides an incentive for more individual to acquire official language proficiency and civics knowledge, which helps them successfully integrate into Canadian society.

* Citizenship applicants will need to be physically present in Canada for a total of their last six years. In addition, they will need to be physically present in Canada for 183 days per year for ar least four of those six years. These provisions will come into force in approximately a year.

* Under the new streamlined decision-making model, citizenship officers will decide all aspects of a citizenship application. Under the old model, obtaining was a three-step process that involved duplication work.

Since 2006, Canada has welcomed over 1,300,000 proud new canadians. Citizenship and Immigration canada received 333,860 Citizenship applications in 2013, the highest volume ever - an average of a quarter million newcomers each year. Canada has one of the highest rates of naturalization in the world. Over 65 percent of eligible residents become citizens. So far in 2014, approximately 122,000 new citizens have joined the Canadian family.

எல்வி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

கனடாவிலுள்ள வைத்தியசாலைகளில் 2012-2013ம் ஆண்டுகளில் 372,244 குழந்தைகள் பிரசவமாகியுள்ளன. இவற்றுள் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேலானவை சத்திரசிகிச்சை மூலம் பிரசவமானவை என்று வைத்திய அறிக்கையொன்று தெரிவிக்கின்றது. இளவயதுப் பெண்களைவிட, 35 வயதும் அதற்கு மேற்பட்டதுமான வயதுப் பெண்களில் அநேகமானவர்கள் சத்திரசிகிச்சை மூலம் குழந்தைகள் பெற்றுள்ளனர்.

கனடிய தபால் இலகா கடந்த மாதம் 16ம் திகதியிலிருந்து வீடுகளுக்குத் தபால்களை விநியோகிக்கும் நேரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. உங்கள் கட்டிடங்களுக்கு முன்னால் தபால் விநியோக வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் நேரத்திலிருந்து இந்த மாற்றத்தைக் கவனிக்க முடியும். நேர மாற்றம் மட்டுமே ஏற்பட்டிருக்கிறதே தவிர தினசரி தபால் விநியோகம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் மிகவும் வாகன நெரிசலுள்ள பிரதேசங்களாக நான்கு பிரதான நகரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. முதலாவது இடத்தில் வன்கூவரும், இரண்டாவது இடத்தில் ரொறன்ரோவும் உள்ளன. இவ்விரு நகரங்களிலும் வருடமொன்றுக்குச் சராசரியாக 85 மேலதிக மணித்தியாலங்களை வாகன ஓட்டுனர்கள் வீதிகளில் கழிக்க நேருகின்றது. ஒட்டாவா, மொன்றியல், கல்கேரி நகரங்கள் அடுத்த இடங்களிலுள்ளன.

கனடாவுக்கு வெளிநாடுகளிலிருந்து வரும் பயணிகள் மேலதிகமாக ஏழு டாலர்களைச் செலுத்த வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. எலக்ட்ரோனிக் பயண அனுமதி வழங்குவதற்கான கட்டணமாக இது அறவிடப்படவுள்ளது. விமான மூலம் வருவதற்கு முன்னர் இதனைச் செலுத்த வேண்டும். ஆனால் அமெரிக்கப் பயணிகளுக்கு இதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.


ரொறன்ரோவில் எரிபொருளின் விலை கடந்த மாதத்தில் கிடுகிடுவென அதிகரித்து உச்சத்துக்குச் சென்றது. கடந்த மாதக் கடைசி வாரங்களில் ஒரு லீட்டரின் விலை ஒரு டாலர் 41 சதத்துக்கும் மேலாகவே இருந்தது. சில நாட்களில் ஒரு டாலர் 49 சதத்துக்கும் உயர்ந்தது. மத்திய கிழக்கின் பதற்ற நிலை காரணமாக இப்போதைக்கு விலை குறைவு ஏற்பட வாய்ப்பில்லையென எதிர்வு கூறப்படுகின்றது.

அவசர புனர்வாழ்வுச் சிகிச்சைக்காக விடுப்பில் சென்றிருந்த ரொறன்ரோ நகர முதல்வர் றொப் ஃபோர்ட் மீண்டும் தமது முதல்வர் பணிக்குத் திரும்பியுள்ளார். பெயர் குறிப்பிட விரும்பாத இடமொன்றுக்குக் கடந்த மே மாதம் முதலாம் திகதி இவர் சென்றிருந்தார். ரொறன்ரோவில் இவர் இல்லாத நிலையிலும் இவருக்கு மக்கள் செல்வாக்குக் குறையவில்லை என்று பலவேறு கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

கோழி இறைச்சியைச் சமைப்பதற்கு முன்னர் கழுவுவதன் வாயிலாக அபாயகரமான பக்டீரியாக்களும் நுண்ணுயிர்களும் சமையலறை முழுவதும் பரவுவதாக அமெரிக்க சுகாதாரத் திணைக்களம் எச்சரித்துள்ளது. இரண்டு லட்சத்து எண்பதாயிரம் வகையான நோய்களுக்கு வழிவகுக்கும் 'காம்பிலொபக்டர்' என அறியப்பட்டுள்ள இந்த நோய்க் கிருமிகள் உணவுப் பொருட்களுள் நச்சேற்றுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் இரத்த வங்கிக்கு இரத்தம் சேகரிக்கும் வேலை அவசர பணியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் எந்தப் பாகத்திலிருந்தும் இதனைச் சேகரிக்கும் தேவை ஏற்பட்டுள்ளது. இரத்த நிலுவையில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், சுமார் 75 முதல் 85 வீதம் வரையில் தாமதமின்றி இரத்தம் சேகரிக்க வேண்டிய அவசியம் இப்போது தேசிய இரத்த வங்கிக்கு உருவாகியுள்ளது.

## ஆங்கிலப் பேராசிரியர் செல்வா கனகநாயகத்துக்கு சிறப்புக் கௌரவம்



ரொறன்ரோ பல்கலைக்கழக ஆங்கிலத்துறைப் பேராசிரியரும், எழுத்தாளரும், சிறந்த விமர்சகருமான செல்வா கனகநாயகம் அவர்களை The Royal Society of Canada அங்கத்தவராக (Fellowship of the Royal Society of Canada) அழைத்துப் பெருமை சேர்த்துள்ளது. 1982ல் நிறுவப்பட்ட மேற்படி அமைப்பு அந்தந்தத்துறையில் சிறப்பான பங்களிப்புச் செய்துவரும் கல்வியாளர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்களை மட்டுமே அங்கத்தவர்களாக அழைத்து நியமித்துப் பெருமைப்படுத்தி வருகின்றது. இந்த வரிசையில் பேராசிரியர் செல்வா கனகநாயகம் அங்கத்தவராக்கப்பட்டு சிறப்புச் செய்யப்பட்டுள்ளார். இந்த மதிப்பார்ந்த அங்கத்துவத்தைப் பெற்றுள்ள முதலாவது தமிழர் இவரே என்பது குறிப்பிடப்படவேண்டியது. ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் வருடாந்தம் நடைபெறும் தமிழியல் மாநாட்டின் அமைப்பாளராகவும், மற்றும் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் தலைவராகவும் இவர் பணியாற்றி வருகின்றார்.

## இது அமைதிக்கான நேரம் பிரேம் இராவத் சிறப்புரை

பிரேம் இராவத் உரையாற்றும் 'இது அமைதிக்கான நேரம்' என்னும் சிறப்பு நிகழ்ச்சி, இந்த மாதம் (ஜுலை) 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஏழு மணிக்கு ரொறன்ரோவிலுள்ள 'சோனி சென்டர்' அரங்கில் நடைபெறவுள்ளது. அழைப்பிதழைப் பெறுவதற்கு, 1.800.409.2053 அல்லது wopg.org/events.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்ராறியோ மாகாண அரசுத் தேர்தல்

## ரிம் குடாக்கின் 'வேலை பறிப்பு' அறிவித்தல் லிபரலின் அமோக வெற்றிக்கு வாய்ப்பானது!



கடந்த மாதம் 12ம் திகதி நடைபெற்ற ஒன்ராறியோ மாகாண சபைக்கான தேர்தலில் முற்றிலும் எதிர்பார்க்காத வகையில் கத்லின் வின் தலைமையிலான லிபரல் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. மீண்டுமொரு சிறுபான்மை அரசை அமைப்பதற்கு மக்களிடம் வாக்குக் கேட்ட லிபரலுக்கு வெற்றி வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்த புரொகிறசிவ் கன்சர்வேடிவ்வின் தலைவர் ரிம் குடாக், அதற்கான விலையாகத் தமது கட்சித் தலைவர் பதவியைத் துறக்க நேர்ந்தது. 'தமது கட்சி பதவிக்கு வந்தால் ஒரு லட்சம் பேரை வேலையிலிருந்து நீக்கி, வரவு செலவுத் திட்டத்தைச் சமப்படுத்தும்' என்று ரிம் குடாக் தேர்தல் பரப்புரையில் கூறியதையடுத்து, ஒவ்வொரு ஒன்ராறியோ வாசியும் தமது வேலைக்கு ஆபத்து வரக்கூடாது என்பதற்காக லிபரலுக்கு ஆதரவாக வாக்களிக்க நேர்ந்தது என்பதைச் சகல கட்சியினரும் ஒப்புக் கொள்கின்றனர்.



இதன் காரணமாக மாகாண சபை கலைக்கப்படும்பொது 37 ஆசனங்களுடனிருந்த புரொகிறசிவ் கன்சர்வேடிவ் கட்சி, தேர்தலில் தனது ஒன்பது ஆசனங்களைப் பறிகொடுத்து 28 ஆசனங்களை மட்டுமே பெற்றுப் படுதோல்வியடைந்தது. 48 ஆசனங்களோடு சிறுபான்மையாக முன்னரிருந்த லிபரல் கட்சிக்கு தேர்தலில் இலகுவாக 58 ஆசனங்கள் கிடைத்தன.

107 உறுப்பினர்களைக் கொண்ட ஒன்ராறியோ மாகாண சபையில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற 54 பிரதிநிதிகள் வேண்டும். ஆனால் அதற்கும் மேலதிகமாக 4 ஆசனங்கள் லிபரலுக்குக் கிடைத்துள்ளதால், அடுத்த நான்கு வருடங்களுக்கும் அதனால் முழுமையான ஆட்சியை நடத்த முடியும்.

## 21 இடங்களையும் தக்கவைத்த என்.டி.பிக்கு 1.1 மில்லியன் வாக்குகள் அதிகரிப்பு!



2011ல் கடைசியாக நடைபெற்ற ஒன்ராறியோ மாகாணத் தேர்தலில் 17 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்ற அன்ட்றியா ஹோவத் தலைமையிலான என். டி. பி, கடந்த இரண்டாண்டுகளில் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் பெற்ற வெற்றிகளின் ஊடாக எண்ணிக்கையை 21 ஆக உயர்த்தியிருந்தது. கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலிலும் தனது எண்ணிக்கையைக் குறைய விடாது 21யையும் தக்க வைத்துக் கொண்டது. அதே சமயம், முன்னைய தேர்தலில் பெற்ற வாக்குகளை விட 1.1 மில்லியன் வாக்குகளை இது இம்முறை கூடுதலாகப் பெற்றுள்ளது. ஆனாலும், நீண்ட கால உறுப்பினர்களான மைக்கல் புறா, றொசாரியோ மார்செஸ் உட்பட மூவர் தோல்வியடைந்தனர். மறுபுறத்தில் வின்ட்சர், சட்பரி, ஒஷாவா ஆகிய மூன்று புதிய தொகுதிகளில் கட்சி வெற்றி பெற்றுள்ளது. லிபரலின் அமைச்சர் ஒருவரைத் தோற்கடித்து அந்த இடத்தை என். டி. பி தம்வசமாக்கியது இத்தேர்தலில் ஒரு சாதனையாகும்.

## கடுமையான மும்முனைப் போட்டியில் நீதன் சண் இரண்டாவது இடத்தில்!

ஸ்காபரோ றூஜ்றிவர் தொகுதியில் இடம்பெற்ற மும்முனைப் போட்டியில் என். டி. பி சார்பில் போட்டியிட்ட நீதன் ஷண் 12,863 வாக்குகளைப் பெற்று இரண்டாமிடத்துக்கு வந்தார். ஏற்கனவே மாகாண சபை உறுப்பினராகவிருந்த பாஸ் பல்கிசூனையும், மாநகரசபை உறுப்பினர் றேமன்ட் சோவையும் எதிர்த்து இவர் போட்டியிட்டது குறிப்பிடத்தக்கது. பாஸ் பல்கிசூனுக்கு 16,134 வாக்குகளும், நீதன் ஷண்ணுக்கு 12,863 வாக்குகளும் கிடைத்தன. றேமன்ட் சோ மூன்றாமிடத்துக்குத் தள்ளப்பட்டார். சண் தயாபரன் மற்றும் கென் கிருபா ஆகியோரும் தத்தமது தொகுதிகளில் சுமார் ஏழாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் இரண்டாமிடத்துக்கு வந்தனர்.

## 43 அமைச்சர்களில் எட்டுப் பேர் பெண்கள்; நால்வர் புதுமுகங்கள்

ஒன்ராறியோவின் முதலாவது தெரிவுசெய்யப்பட்ட முதலமைச்சர் என்ற பெருமையுடன், 43 பேரைக் கொண்ட அமைச்சரவையை கத்லின் வின் கடந்த மாதம் 24ம் திகதி நியமித்தார். இதில் எட்டுப் பேர் பெண்கள். நான்கு அமைச்சர்கள் புதுமுகங்கள். முன்னைய அமைச்சரவையிலிருந்த எவரும் வெளியேற்றப்படவில்லை. சிலருக்கு அமைச்சு மாற்றம் கிடைத்துள்ளது. கென் கிருபாவுடன் போட்டியிட்டு வெற்றி பெற்ற மிற்சி ஹன்டரும், சண் தயாபரனுடன் போட்டியிட்டு வெற்றி பெற்ற மைக்கல் சானும் அமைச்சர்களாகியுள்ளனர். சுகாதார அமைச்சராக மருத்துவர் எரிக் ஹொஸ்கின்ஸ் நியமனமானது குறிப்பிடத்தக்கது.

## வாக்களித்தோர் 52.1 வீதம் மட்டுமே

கடந்த மாத ஒன்ராறியோ தேர்தலில் 52.1 வீத வாக்காளர் மட்டுமே வாக்களித்தனர். ஒன்ராறியோ மாகாணத் தேர்தல் வரலாற்றில் குறைந்தளவு வாக்களித்தோர் விகிதாசரத்தில் இது இரண்டாவது இடத்திலுள்ளது. டால்ரன் மாக்கன்றி தலைமையில் 2011ல் தேர்தல் நடைபெற்றபோது 48.2 வீரமானவர்கள் மட்டுமே வாக்களித்தனர்.

## ரிம் குடாக்கின் இடத்துக்கு கிறிஸ்ரின் எலியட்?



காலியாகியுள்ள ஒன்ராறியோ புரொகிறசிவ் கட்சியின் தலைவர் ரிம் குடாக்கின் பதவியில் கட்சியின் துணைத் தலைவரும் விற்பி-ஒஷாவா தொகுதியின் உறுப்பினரு-மான கிறிஸ்ரின் எலியட் நாட்டம் கொண்டுள்ளார். அண்மையில் காலமான கனடிய நிதி அமைச்சர் ஜிம் பிளாஹெட்டியின் மனைவியான இவரும் ஒரு சட்டவாளர். 2006ம் ஆண்டிலிருந்து இவர் மாகாண சபை உறுப்பினராகவுள்-ளார். இவர் தலைவராகத் தெரிவானால், ஒன்ராறியோவிலுள்ள மூன்று பிரதான கட்சிகளின் தலைவர்களாகவும் சமகாலத்தில் பெண்களே இருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# அடிக்கடி பசிக்கிறதா?

எனக்கு அடிக்கடி பசிக்கிறது என்று யாராவது சொன்னால்'அடங்காப் பசியன், "பீமன் பரம்பரையில் வந்தவன்,'சாப்பாட்டுக் கிலி பிடிச்சவன் என்றெல்லாம் நக்கல் அடிக்கவே தோன்றும்.

மாடு இரை மீட்பது போல எந்த நேரமும் எதையாவது வாயில் போட்டு அரைத்துக் கொண்டிருந்தால்தான் அவர்களுக்கு மனசும் வயிறும் அடங்கும்.

சாப்பிட்டு இரண்டு மூன்று மணித்தியாலயம் போனதும் எப்ப பார்த்தாலும் மீண்டும் பசி எடுக்கிறது என்று யாராவது சொன்னால் அதை பொய்க் கதை என நினைக்காதீர்கள். அதில் ஏதாவது உண்மை இருக்கலாம்.

பொதுவாக நாம் காலை மதியம் இரவு என்று மூன்று நேர உணவு எடுக்கிறோம். சிலர் இடைநேரச் சிற்றுண்டிகள் எடுப்பதுண்டு. சாப்பிட்டால் வயிறு நிறையும். நீண்ட நேரம் பசிக்காது. குறைவாகச் சாப்பிட்டிருந்தால் கொஞ்ச நேரத்தில் மீண்டும் பசிக்கலாம்.

ஆனால் அவர்களுக்கு அப்படியல்ல. சாப்பிட்ட பின்னர் ஒவ்வொரு நாளும் எந்த நேரமும் பசிக்கிறது. அதற்கு அடிப்படைக் காரணம் என்ன? மனம்தான் என வெறுமனே சொல்லிவிட முடியாது. வேறு காரணங்களும் இருக்கக் கூடும்.

அத்தகையவர்களது இரத்தச் சீனி அளவை அத்தகைய பசி நேரத்தில் கணித்துப் பார்த்தால் அவர்களில் சிலரது இரத்தச் சீனியின் அளவு குறைந்திருக்கக் காணப்படலாம்.

பொதுவாக உணவு உண்ட பின் குருதிச் சீனியின் அளவு அதிகரிக்கும். ஆனால் இவர்களுக்கு உணவின் பின் குருதிச் சீனியின் அளவு குறைந்திருந்தது. ஆச்சரியமாக இருக்கிறதா?

குருதி சீனியின் அளவு குறைதல் (hypoglycemia)

பொதுவாக காலையில் வெறும் வயிற்றில் எடுக்கும் குருதிச் சீனியின் அளவு 80 லிருந்து 110 ற்குள் இருக்கும். சாப்பிட்ட பின்னர் இது 140 முதல் 180 வரை அதிகரிக்கலாம். அது 70 ற்குக் கீழ் குறைந்தால் குருதிச் சீனி குறைதல் (hypoglycemia) என்பார்கள்.

ஆனால் பொதுவாக குருதிச் சீனியின் அளவு தானாக வழமையை விடக் குறைவதில்லை. இதற்குக் காரணம் எமது உடலானது உடலின் கொழுப்புக் கலங்களிலும் ஈரலிலும் சேமித்து வைத்திருக்கும் கொழுப்புகளைக் கரைத்து குருதிச் சீனியின் அளவை சரியான அளவில் பேணும் வல்லமை கொண்டது என்பதாலாகும்.

ஆனால் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பிரிவினருக்கு சாப்பிட்டு 2 முதல் 3 மணித்தியாலயத்தின் பின்னர் அது 70 முதல் 100 ஆகக் குறைந்திருக்கும். இதனை (Reactive hypoglycemia) என மருத்துவத்தில் அழைப்பார்கள். உணவிற்கு எதிர்வினையாக குருதிச் சீனி குறைகிறது. இது நீரிழிவு அற்றவர்களுக்கு ஆகும்.

இதைத் தவிர ஆகாரம் எடுக்காத நேரத்தில் காலையில் சிலரது சீனியின் அளவு மேற்கூறிய அளவுகளுக்குக் குறையக் கூடும். அதை மருத்துவத்தில் (Fasting hypoglycemia) என்பார்கள்.

பன்கிரியாஸ் சுரப்பியில் கட்டிகள், ஈரல் நோய்கள் போன்றவை அத்தகைய நிலையை ஏற்படுத்தக் கூடும். சில சத்திர சிகிச்சைகளின் பின்னரும் சில மருந்துகளாலும் கூட இவ்வாறு வெறும் வயிற்று சீனியின் அளவு குறைவதுண்டு.

நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு சீனியின் அளவு குறைவது முற்றிலும் வேறு விடயமாகும்.

• நீரிழிவற்கான மாத்திரைகளை அல்லது ஊசி போடும் போது உணவுகளை சரியான நேரத்தில் எடுக்காததாலும்,
• விரதம் உபவாசம் இருப்பதாலும் குருதிச் சீனியின் அளவு குறைகிறது.
• அதைவிட மருத்துவ ஆலோசனையின்றி மருந்துகளை மாற்றுவதும், அவற்றின் அளவுகளை மாற்றுவதும் அளவு மீறிப் போடுவதும் நீரிழிவு நோயாளரின் குருதிச் சீனி அளவு குறையக் காரணமாகின்றன.

அறிகுறிகள் எவை?

குருதியில் சீனியின் அளவு குறையும் போது வெளிப்படும் அறிகுறிகள் எவை. வழமையாக சீனியின் அளவு குருதியில் குறையும் போது தோன்றும் அறிகுறிகளை ஒத்ததே இவையும்.

முக்கியமான அறிகுறி பசிதான். அதாவது இங்கு சாப்பிட்ட பின் ஏற்படும் பசியாகும். அத்துடன் உடல் பலவீனமாக இருப்பதாக உணர்வர். உடற் பதற்றம், வியர்வை, தலைப்பாரம், தூக்கத் தியக்கம், தலைச்சுற்று, தலையிடி, மனப்பதற்றம், மனக் குழப்பம், எரிச்சலுறுதல், பார்வை மங்கல், உள்ளங்கை கால்கள் குளிர்தல், ஓங்காளம், சத்தி போன்ற அறிகுறிகளில் சில ஏற்படலாம்.

ஆனால் மேற்கூறிய அறிகுறிகள் குருதியில் சீனி குறைவதால் மட்டுமின்றி வேறு காரணங்களாலும் ஏற்படலாம் என்பது உண்மையே. மனச்சஞ்சலம் கவலை உணவு ஒவ்வாமை உணவு நேரங்களில் மாற்றம் போன்றவையும் காரணமாகலாம்.

எனவே அறிகுறிகளை வைத்துக் கொண்டு இது உணவு எதிர்வினையால் ஏற்படும் குருதிச்சீனி குறைவடைதல் என்ற சுய முடிவிற்கு வரக் கூடாது. மருத்துவரைக் காண வேண்டும்.

ஒருவரது அறிகுறிகளை மருத்துவர் நன்கு பகுத்து ஆராய்வார். பின்னர் அத்தகைய அறிகுறிகள் ஏற்படும் வேளையில் குருதியில் சீனியின் அளவைக் கணிப்பார்கள். அது குறைவாக இருப்பது நிச்சயமானால் மீண்டும் ஆகாரம் எடுத்தவுடன் அத்தகைய அறிகுறிகள் மறைந்து சீனியின் அளவு அதிகரிக்கிறதா என அவதானிப்பார்கள். இவற்றின் பின்னர்தான் அது Reactive hypoglycemia என்பதை நிச்சயமாகக் கூறமுடியும்.

மருத்துவமும் உணவு முறையும்

பெரும்பாலும் மருத்துவம் எதுவும் தேவைப்படாது.

உணவு முறைகளிலும் அவற்றை உட்கொள்ளும் நேரங்களிலும் தேவைக்கு ஏற்ப மாற்றங்கள் செய்வது மட்டும் போதுமானது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சோதனைகள் சவால்கள் பலவற்றை சாதக சிந்தையால் எதிர்கொண்டு சமாளித்து செயற்பட்டு மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்துவரும் ஓய்வு பெற்ற ஆசிரியர் பத்மநாதன் கனகராஜா அவர்களுடன் திரு. கதிர் துரைசிங்கம் நடத்திய சிறப்பு உரையாடல் இங்கு செவ்வி வடிவில் இடம்பெறுகிறது.*



கனடா தின
சிறப்புக் கட்டுரை

# அனுபவத்தையும் முதுமையையும் கனடா ஏற்று மதிக்கிறது !

கேள்வி: உங்கள் குடும்பம் கல்வி, தொழில் ஆரம்பகால வாழ்க்கை பற்றி முதலில் கூறுங்கள்.

பதில்: எனது மனைவி ரஞ்சிதமலர், நாம் இருவரும் 400 மக்லிவன் தொடர்மாடி விடுதி ஒன்றில் சந்திக்கிறோம். பிள்ளைகள் மூவர். 1934ம் ஆண்டு யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் பிறந்த நான் வைத்தீஸ்வராக் கல்லூரியில் உயர்கல்வி பயின்று பின்னர் இந்தியா சென்று சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் கற்று பி.எஸ்.ஸி பட்டம் பெற்றேன். 1960ல் ஹனுவெலவில் சென்ஜோன்ஸ் பொஸ்கோ கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெற்று ஓர் ஆண்டு பணியாற்றியபின், குருநாகல மாலியதேவ ஆண்கள் கல்லூரிக்கு மாற்றமாகினேன். சுயமொழிக் கல்வி அமலுக்கு வந்ததும் இரத்மலானை இந்துக் கல்லூரிக்கு 1966ல் மாற்றம் கிடைத்தது. உயர்தர வகுப்புகளுக்கு தமிழில் தாவரவியல், விலங்கியல் கற்பித்ததோடு கல்லூரி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட காரணத்துக்காக பதில் அதிபராக உயர்வு பெற்றேன்.

1981இல் நைஜீரியாவிலுள்ள சோகோரோ (Sokoto) மாகாண கல்வித் திணைக்களத்தால் ஒப்பந்த நிபந்தனையில் மனைவியும் நானும் தெரிவாகி அங்கு சென்று ஆசிரியர்களாக கவுரன்மொட அரச கல்லூரியில் 5 வருடங்கள் பணியாற்றினோம்.



கேள்வி: கனடா வந்த கதையை கூறுங்கள்.

பதில்: நைஜீரியாவில் எங்கள் முதல் ஒப்பந்தம் முடிவுக்கு வரும்வேளை இலங்கையின் இனக்கலவர காரணம் காட்டி கனடாவில் தஞ்சம் கோரலாம் என்ற நோக்கில் எம்மவர் பலருடன் நானும் குடும்பமாக 1988ல் ரொறன்ரோ வந்து சேர்ந்தோம். கனடிய அரசு எங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து அகதி நிலையில் வந்த எங்களைச் சில ஆண்டுகளில் பிரஜாவுரிமை வழங்கி கனடிய பிரஜைகளாக்கியது. ஆசிரியத் தொழில் கிடைக்காத நான் காவற்பணியாளராகப் பணிபுரிந்தேன். மனைவி ECE Diploma பெற்று Daycare ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1998ல் நான் ஓய்வு பெற்றதோடு நோய்கள் சோதனைகள் பலவற்றை எதிர்கொண்டேன்.



கேள்வி: உங்களுக்கு முன்னரே இருந்த நோய்கள் காரணமாக இருந்தவையா, அல்லது புதிய நோய்கள் காரணமா?

பதில்: எனக்கு நீரிழிவு நோய் 1980ம் ஆண்டு ஆரம்பமானது. தொடர்ந்து உயர் இரத்த அழுத்தமும் இருந்தது. இங்கு 1998ல் நடந்த கார் விபத்து மூலம் ஏற்பட்ட தாக்கங்களுக்கு உடற்பயிற்சி செய்யும் Treadmill இல் நடக்கும்போது மூச்சு வாங்குவதை அறிந்து என்னை வைத்திய பரிசோதனைக்கு அனுப்பி இருதய பரிசோதனை செய்தபோது இருதய முடியுரி நாடி 3 இல் தடை இருப்பதை கண்டுபிடித்தார்கள். 1999ல் இருதய சத்திரசிகிச்சை நடந்தது. விரைவில் குணமாகி இயல்பு நிலைக்கு வந்தேன்.

கேள்வி: உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு இரண்டும் உங்கள் நாடிகள் அடைப்புக்குக் காரணமாக இருந்திருக்கலாம் அல்லவா? இப்பொழுது 15 ஆண்டுகள் - இருதய சத்திரசிகிச்சை பின்னர் இருதய பிரச்சனைகள் பற்றிக் கூறுங்கள்.

பதில்: ஆண்டவன் அருளால் இதுவரை இருதய பிரச்சனை எதுவும் இல்லை என்றே கூறுவேன். ஆனால் வலது கால்முட்டில் ஏற்பட்ட சிறிய காயம் பெரிதாகி நீரிழிவு காரணத்தால் மாறாமல் ஸ்காபரோ பொது வைத்தியசாலையில் என்னை அனுமதித்து சிகிச்சை பயன் அளிக்கவில்லை. உயிராபத்து ஏற்படும் அபாயம் காரணமாக முழங்காலுக்குக் கீழ் துண்டிக்க நான் சம்மதித்தேன். 2001ல் எனது வலது கால் முழங்காலுக்குக் கீழ் நீக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியிலிருந்து காயம் குணமாக அப்பியாசப் பயிற்சி முதலியன செய்ய வேண்டுமென்று Provident Health Care Centre க்கு என்னை அனுப்பினார்கள். ஒருகாலுடன் நடை பழகி பின்னர் பொய்க்கால் பொருத்தி அதோடு நடை பயிலும் பயிற்சி தந்தார்கள். எனக்கு வரைதல் சித்திரம் ஆர்வமான பொழுதுபோக்கு. இந்தப் பயிற்சி நிலையத்தில் தினமும் நடந்த பயிற்சி முறைகளைப் படங்களாக விளக்கத்துடன் வரைந்து ஒரு கையெழுத்துப் பிரதியை உருவாக்கினேன். இந்த பயிற்சி நிலையத்தில் எனது நூலைப் பயிற்சி நூலாகப் பாவிக்கிறார்கள்.

கேள்வி: உங்கள் துயரிலும் மற்றவர்கள் பயன்பெறும் செயல் ஒன்றைச் செய்துள்ளீர்கள். ஒரு கால் இயல்பு நிலை இழந்துவிட்டது. (32ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

43

வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாவற்றையும் பிரபஞ்சமே சரியாக செய்ததனால்தான் வாழ்க்கையே வந்தது. மனமும் வந்து மனிதனும் வந்தது ஆச்சரியமில்லை. பொருள், வாழ்க்கை, மனம் போன்றவை எல்லாம் பரிணாம வளர்ச்சியின் ஒரே திட்டம்தான். ஆதிமூலத்துக்கு எல்லாமே ஒன்றுதான்.

மனித இனம் இன்னும் முழுமையாக சீரடையாமல் உள்ளது. அவர்களது சிந்தனையும் செயலும் தெளிவடைந்துவிட்டால் உலகம் சொர்க்கமாகிவிடும். மனம் வளர்ந்து அறிவு வளர்ந்தது. ஆனால், வன்முறை போகவில்லை போர் ஒழியவில்லை. சிந்தனை மூலம் விலங்குகளுக்கு ஒப்பாக இருந்த மனித இனம், நன்றாக முன்னேறியும் உலக அளவான அரசுமூலம், சட்டத்தின் மூலம் போரை நிறுத்த முடியவில்லை. மனதினை பக்குவப்படுத்த வேண்டும் அதுதான் வரலாற்றின் பாடம்.

மூளை என்பது பௌதிகமானது. ஆனால், மூளையே மனமல்ல் படைப்பின் கடைசி கட்டமாக மனதை ஏற்படுத்தியுள்ளது. அதுதான் மனித இனத்தின் தனித்தன்மை. விலங்குகளுக்கும் ஞாபகம் உள்ளது. அதை வைத்து அவைகள் பேச முடியாது. மனித இனம் மனதினை வைத்து மொழியை கண்டுபிடித்துள்ளது. அதை வைத்தே வாழ்க்கை நடத்துகின்றது. எனினும், ஒரு குறிக்கோளை வைக்க மனமே உதவுகிறது. குறிக்கோளை அடையும்வேளை மகிழ்ச்சியும் கொள்கிறது.

மகிழ்ச்சி என்பது யாருக்கும் எளிதில் கிடைப்பதில்லை. அதற்கு பல காரணங்கள் உண்டு. இயற்கையான நிலையில் மனம் பலவீனமாக உள்ளது. அதை சரி செய்தால்தான் சக்தி பிறக்கிறது. அதனை சரிசெய்யவே நாம் எங்கும் ஓடிக் கொண்டிருக்கிறோம். மரத்தின் கீழ் உள்ள சூலம் முதல் பெரிய கோபுரம்வரை தரிசிக்கிறோம் கிளியின் சோதிடம் முதல் காண்டம் பார்ப்பதுவரை அங்கலாய்க்கிறோம். ஞானிகள், சுவாமிகள், மகரிஷிகள், முனிவர்கள், தபோதனர்கள், மகான்கள் எல்லோரிடமும் செல்லுகிறோம். புத்தர், துன்பத்தை அறவே ஒழிக்க முடியும் என்றார். அவர் சொல்லி ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் துன்பம் தொடர்கிறது. உண்மையில் மனம் மாறிக் கொள்வது மிகவும் கடினமான விடயம். அன்பே சிவம், உன்னைப்போல் அயலவனை நேசி, எல்லோரும் சகோதரர்கள், மகிழ்ச்சி உள்ளிருந்து பிறக்கிறது, வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணம், ஏழையின் கண்களில் தெய்வம் உள்ளது, தெய்வம் நீயென்றுணர் என்று எத்தனையோ அறிவுரைகள் போதனைகள் தோன்றினாலும் அதற்கு எதிர்மாறாகவே வாழ்ந்து வருகிறோம்.

குழந்தைப் பருவத்திலிருந்து சரியான பயிற்சி வேண்டிய தருணம் இதுவாகும். குழப்பங்களும் தவறுகளும் மட்டுமே ஆட்சி செய்ய முடிகிறது. "பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு" என்றதொரு பழமொழி என்றும் உள்ளதொன்று. மனம் என்பது மாபெரும் புதிர். விஞ்ஞானமும் தோற்றுப் போயுள்ளது. மனம், யாருக்கும் எந்தக் காலத்திலும் எந்த உத்தரவாதமும் கொடுக்கவில்லை. மனதை சீர்படுத்துவது பிரம்ம பிரயத்தனம். உடற்தொல்லைகளை மீறி மனம் ஒருமைப்பட வேண்டும். மனநோய்களை தீர்க்க எத்தனையோ மருந்துகள் வருகின்றன. கூடவே பக்கவிளைவுகளையும் கொண்டு வருகின்றன. மனதின் ரசாயனங்கள் எளிதானதல்ல. உயிரைக் காப்பாற்ற நல்ல மனத்தோடு வாழ்வதுதான் மனிதனின் கௌரவம்.

உண்மைகள் உணரப்படும்போது மனம்
வைரமாக ஜொலிக்கும்" - யாரோ

மீண்டும் சந்திப்பேன்...

# அதிர்ச்சி தரும் உலகக் கிண்ணம்

எதிர்பாராத அதிர்ச்சிகளை ஏற்படுத்தி விடுவதில் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு நிகரானவை வேறு எவையும் இல்லை எனலாம். இப்போது பிரேஸிலில் நடக்கும் உலகக்கிண்ணத்திலும் எதிர்பாராத அதிர்ச்சிகள் வலிமையான அணிகளுக்கு கிடைத்துள்ளன.

ஐரோப்பிய கிண்ணத்தை 2008 ஆம் ஆண்டில் கைப்பற்றியதுடன் தொடங்கிய ஸ்பெயின் அணியின் சாதனைப் பயணம் 2010 இல் உலகக்கிண்ணத்தையும் கைப்பற்றி உதைபந்தாட்டத்தை தனது ஆதிக்கத்துக்கு உட்படுத்தியது.

6 ஆண்டுகளாக உதைபந்தாட்ட உலகில் ஆதிக்கம் செலுத்திய ஸ்பெயின் இம்முறை உலகக்கிண்ணத்தில் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெறாமல் ஒரு ஆட்டத்தில் மாத்திரமே வெற்றி கொண்டு வெளியேறுகின்றது. இதேபோன்று ஐரோப்பாவின் பலம் மிக்க அணிகளில் ஒன்றான இங்கிலாந்தும் அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியாமல் வெளியேறியுள்ளது.

போட்டியை நடத்தும் பிரேஸில் இம்முறை கிண்ணத்தை வெல்லும் நாடுகளுக்கான கணிப்பில் முதலிடத்தில் இருக்கின்றது. எனினும் அந்த அணி தட்டுத் தடுமாறி மூன்றாவது ஆட்டத்திலேயே தனது இரண்டாவது சுற்று வாய்ப்பைப் பெற்றுள்ளது. கிண்ணம் வெல்லும் என எதிர்பார்க்கப்படும் பிரேஸிலிடம் எதிரணிக்கு 'மரண அடி' கொடுக்கக் கூடிய ஆட்டத்தைக் காணமுடியவில்லை.

இது போன்று கிண்ணம் வெல்லும் வாய்ப்பு அதிகமுள்ள மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்ரீனா அணியும் தட்டுத் தடுமாறியே இரண்டாவது சுற்று வாய்ப்பைப் பெற்றுள்ளது.

அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியாது வெளியேறிய அணிகளின் விவரம்:- கமரூன் (பிரிவு 'ஏ'), குரோசியா (பிரிவு 'ஏ'), ஆஸ்திரேலியா (பிரிவு 'பி'), ஸ்பெயின் (பிரிவு 'பி'), இங்கிலாந்து (பிரிவு 'டி'), பொஸ்னியா - ஹேர்சகோவினியா (பிரிவு 'எவ்'),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# OK? OK. OK!
# ஓகே? ஓகே. ஓகே!

கனடா நாட்டிற்குப் புலம்பெயர்ந்து வந்தபின்பு, சதா கேட்கும் ஒரு சொல் Ok என்பது. தற்பொழுது எமது தாய் நாட்டிலும் கணினிகளும், text messages ம் பாவனைக்கு வந்தபின்பு இச்சொல் தாராளமாகப் பாவிக்கப்படுகிறது. பாடசாலைப் பிள்ளைகள் மாத்திரமல்லாது, ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள்கூட Ok என்று அடிக்கடி பாவிப்பார்கள். அதுவே அது சம்பாஷணையின் முடிவாகவும், கேள்விக்குறியாகவும் அமைவதைப் பல இடங்களில் காணலாம். சிறுபிள்ளைகள் தொடக்கம் வளர்ந்த பிள்ளைகள்வரை கேள்விகளைக் கேட்டு, Ok எனத் தாங்களே பதிலையும் சொல்லி விடுவார்கள். உதாரணமாக"அம்மா இன்று நான் வீட்டிற்கு வர நேரமாகும் - Ok - இதில் வேறு பேச்சுக்கு இடமில்லை. ஒரு சில பிள்ளைகள் - "வீட்டிற்கு வர நேரமாகும் - Ok தானே?" என கேட்பதும் உண்டு. இதில் பெற்றோருக்கு அபிப்பிராய பேதம் ஏற்பட்டாலும் பிள்ளைகள் கேட்கப் போவதில்லை. ஆகவே பிரச்சனை ஏற்படாமல் பெற்றோர் ஒரு நீண்ட OK...kkk என்று சொல்லி விடுவார்கள். வகுப்பிலும் சில ஆசிரியர்கள் பாடங்களை விளங்கப்படுத்தும் பொழுது வசனத்துக்கு வசனம் Ok சொல்வதுண்டு. மாணவர்களிடம் உங்களுக்கு விளங்கியதா எனச் சுருக்கமாகக் கேட்கும் முறை இது. ஆனால் அதற்கான பதிலை மாணவர்கள் சொல்வதும் இல்லை. ஆசிரியர்கள் எதிர்பார்ப்பதும் இல்லை. Ok சொன்ன அடுத்த மூச்சில் ஆசிரியர் தொடர்ந்து கற்பிப்பார்.

இந்த Ok என்ற சொல்லின் தோற்றம் எப்படி ஏற்பட்டது. இந்தச் சொல்லின் வயது 175 என்றால் நம்புவது கடினமாக உள்ளது. சொற்களுக்கும் வயது உண்டு. 175 வருடங்களாக Ok என்ற பதம் உலகளாவிய ரீதியில் பாவனையில் இருந்தது என்பதனை இரண்டாம் உலகப்போர் காலத்தில்தான் கண்டறிந்தனர். அதுவரை அமெரிக்கர்கள் தங்கள் நாட்டில்தான் Ok ஜனனம் ஆகியதாகவும், தங்களுக்குத்தான் சொந்தமானதாகவும் கருதினர். ஆனால் இரண்டாம் உலகப் போரிற்கு அமெரிக்கர்கள் சென்ற பொழுது அங்கு வருகை தந்திருந்த இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஏன் ஜப்பான் சிப்பாய்கள்கூட தாராளமாக Ok சொல்வதைக் கண்டார்கள். ஆகவே அமெரிக்கர்களுக்கு முன்பாகவே இச்சொல் பாவனையில் இருந்திருக்கிறது எனக் கருத வேண்டியுள்ளது.

Entymologist Allen Walker Read என்பவர் - Boston Morning Post என்ற பத்திரிகையில் 1839ல் Ok என்ற சொல் காணப்பட்டதாகக் கூறுகிறார். All Correct என்ற சொல்லையே பகிடியாக All Korrect என்று பாவித்ததாகவும் அதுவே பின்பு Ok யாக மாறியதாகவும் கூறுகிறார்.

1840ல் Martin Van Buren என்பவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாகப் போட்டியிட்ட பொழுது Old Kinderhook என்ற புனைப் பெயரால் அழைக்கப்பட்டார். Kinderhook என்பது Martin Van இன் பிறந்த ஊர். Vote for Ok என்ற சுலோகம் பகிடியாகப் பாவிக்கப்பட்டது. இதனால் பிரசித்தமாகிய இச் சொல் இதன் எளிமை காரணமாக தந்திகள் அனுப்பும் பொழுது பாவனையில் சேர்க்கப்பட்டது. 1967ல் Thomas A. Harris என்ற எழுத்தாளர் I am OK You are Ok என்ற புத்தகத்தை எழுதினார். இது எவ்வாறு நாமே சுயமாகக் கற்கலாம் என்ற முறைகளைப் போதிக்கும் புத்தகமாகும். இப் புத்தகம் பெருமளவில் பாவனைக்கு வந்தது. அதோடு மும என்ற சொல்லும் பெருமளவில் உலக நாடுகளில் பாவனைக்கு வந்தது.

1969ல் முதன்முதலாக மனிதன் சந்திரனில் காலடி எடுத்து வைத்த பொழுது பாவித்த நான்காவது சொல் Ok யாகும். Armstrong சந்திரனில் இறங்கியவுடன் Aldrian இடம் இயந்திரத்தின் இயக்கத்தை"Shut down என்று கூற அவர் அதற்கு"Ok, Engine stop"என்று பதிலளித்தார். ஆகவே சந்திரனில்கூட இச்சொல்லின் பாவனை தேவைப்பட்டுள்ளது.

கணினியில் Google Search இல் ஆராய்ந்தால் Ok பற்றிய பலவிதமான பாவனைகளைக் காணக் கூடியதாகவுள்ளது. அவற்றில் ஒரு சிலவற்றைப் பார்ப்போம்:-
Informal Exclamation சம்மதத்தைத் தெரிவிப்பதற்காகப் பாவிக்கப்படுகிறது (Acceptance or agreement) - Ok நீங்கள் கூறியவற்றை எனது சிநேகிதிகளுக்குக் கூறுகிறேன்.

Adjective ஒரு சொல் அடைமொழியாகப் பாவிக்கப்படுகிறது.
The flight was Ok. (திருப்தி,சரி என்ற கருத்துப்பட கூறப்படுகிறது)
Adverb ஒரு வினைச் சொல்லுக்கு அடைமொழியாகப் பாவிக்கப்படுகிறது The computer continues to work Ok. (நன்றாக, சரியாக என்ற கருத்துப்பட பாவிக்கப்படுகிறது)
Noun பெயர் சொல் - Do you know when your boss will give the Ok. (சம்மதம், உடன்பாடு என்ற கருத்தில் பாவிக்கப்படுகிறது)
Verb வினைச்சொல் - The president recently Ok'd the execution of the prisoner (சம்மதம், உடன்பாடு, கையொப்பம் இடுதல்)

மேற்கூறிய உதாரணங்கள் Ok என்ற இரு எழுத்து வடிவம் எவ்வாறு எல்லாம் பாவிக்கப்படலாம் என்பதை எடுத்துக் காட்டுகிறது. இது மாத்திரமல்ல Ok என்ற சொல்லை கூறும்பொழுது அதன் தொனி, அழுத்தம் முதலியன அதன் பொருளை புலப்படுத்துகின்றன. சில சமயங்களில் எங்கள் தொணதொணப்புத் தாங்காமல் எங்கள் பிள்ளைகள் Ok, Ok என்று பலத்த சத்தமாகக் கத்துவார்கள். அதன் பொருள் - போதும், நிற்பாட்டுங்கோ என்பதாகும்."Ok நான் சொன்னது விளங்கினதா என அழுத்தமாக Ok சொன்னால்"நான் சொன்னபடிதான் செய்ய வேண்டும்"என்பதாகும்.

தற்பொழுது சிலர் இந்த Ok என்ற இரு எழுத்துக்களுக்கு Okay என ஒரு எழுத்து வடிவமும் கொடுத்துள்ளனர். சில காதலர்கள் அன்பாக Okey Dokey என்று சொல்லத் தொடங்கியுள்ளனர். SMS அனுப்பும் சிலர் இப்பொழுது k மாத்திரம் பாவிக்கத் தொடங்கியுள்ளனர். பல, பல வடிவங்களை Ok பெற்றாலும் எதுவும் பாவனையாளருக்கு Ok தான். அலைபேசிச் சாதனங்கள் இன்றைய சமூகத்தை வழி நடத்திச் செல்கின்றன. குழந்தைப் பிள்ளைகள் தொடக்கம் முதியோர்வரை அலைபேசிச் சாதனம் ஒன்றினை தாராளமாகப் பாவிக்கிறார்கள். ஆகவே சுருக்கமாக எழுதவோ, பேசவோ வேண்டிய நிர்ப்பந்தம் இன்று ஏற்பட்டுள்ளது. Ok யின் பாவனை மேலும் மேலும் வளரும். Ok தானே?! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் பத்தாம் பக்கம்

# யாவரும் கேளிர்

நண்பர்கள் நாளாக ஜூலை 30 ம் திகதியை பல நாடுகள் புன்னகையுடன் வரவேற்றுக் கை குலுக்கிக் கொள்ள தினமும் ஒரு நட்பை நாடும் மேலும் சில நாடுகள் ஆகஸ்ட் மாதத்தின் முதலாவது ஞாயிற்றுக்கிழமையை நட்புடன் உபசரிக்கின்றன.

சகல ஊர்களும் எங்களுக்கானவை - சகலரும் எங்களின் நண்பர்கள் என்ற அர்த்தத்தில் யாதும் ஊரே யாவரும் கேளிர் என புறநானூற்றில் கூறிச் சென்ற கணியன் பூங்குன்றனாரின் படமிருந்தால் தூசுதட்டி அந்த நாளிலாவது மாலையிடத் தோன்றும்.

தமிழ் இலக்கியவாதிகள் யாராவது கேளிர் என்பதை கேளீர் ஆக்கி அறிவை அள்ளி வைக்கும் பொழுது அதனைத் திருத்துவதற்கு ஏற்ற அறிவார்ந்த நண்பர்கள் அவர்களுக்கு இல்லையோ என்ற ஏக்கமும் அதே தினத்தில் இதயத்தை உலுப்பும்.

நட்பு, நட்பு ஆராய்தல், பழமை (முதிர் நட்பு), தீ நட்பு, கூடா நட்பு என ஐந்து அதிகாரங்களை நட்பாக்கி உள்ளார் வள்ளுவர். நட்பு, நண்பு, சினேகிதம், மித்திரம், சகாத்தம், சகித்துவம், தோழமை என இதயங்களை இணையவைக்கும் அந்த உறவுக்கு பெயர்கள் பல!

உடல்நலம் மனநலம் இரண்டிலும் நட்பின் பங்கு அதிகம். எதனையும் மனம் திறந்து பேசலாம் என்று எண்ண வைப்பவர்கள், பழகுவதற்கு மிகவும் சுவாரஸ்யமாக, இனிமையாக, உற்சாகமாக இருப்பவர்கள், நல்ல புதிய விடயங்களை அறிவிப்பவர்கள், தட்டிக்கொடுத்தோ,ஆறுதல்கூறியோ நமது மனநிலை அறிந்து தோள்கொடுப்பவர்கள் என நட்பில் சந்தோஷம் கலப்பவர்கள் பலர்.

நட்பின் இலக்கணம் எந்தவோர் அகராதிக்குள்ளும் இருப்பதில்லை. அது இதயங்களுக்கு அருகிலேயே துடித்துக் கொண்டிருக்கும்.
நிகழ்காலத்தை நிமிர வைப்பதும் இறந்தகாலத்தை இறவாதகாலம் ஆக்குவதும் நட்பு என்பது நண்பர்களுக்கு மட்டும் தெரியும்.
அகத்துக்குள் ஆணிவேர் பிடிக்கும் நட்பு விரைவில் முனை முறிந்து போவதில்லை என்பது நண்பரல்லாதோருக்கும் தெரியும்.
சொல்லக் கூடாத, சொல்ல முடியாத அனைத்தையும் பகிர்ந்து கொள்ளக்கூடிய அணுக்கமான நட்பு உங்களுக்கிருப்பின் அது உயிர் நட்பு. எந்தத் 'தில்லாலங்கடி வேலை செய்தாலும் பிரிக்க முடியாத நேசமும் இறுக்கமும் உள்ளது உயர் நட்பு. அன்பும் புரிதலும் பிணைப்பும் அற்று கூடுவதும் கூடிய வேகத்திலேயே ஊடுவதும் தருண நட்பு. கேளிக்கைகளில் பங்குபற்றுவதுடன் நின்றுவிடுவது கரும நட்பு. குழந்தை களின் மனதில் வரும் நட்பு விளையாட்டுக் காட்டும், அடிக்கும், கிள்ளும். மனதுக்கு மட்டுமே தெரிந்த, அதிகம் ரசிக்கும் அது பாவனை நட்பு. ஆன்மிக நோக்கத்துக்காக மட்டும் இணைந்து செயற்படுவது மார்க்க நட்பு. இதயங்களைச் சம்பாதிக்கத் தெரியாது கடனுக்காக பழகுவது நளின நட்பு. இங்கு வாங்கி அங்கு கொடுப்பதும் அங்கு வாங்கி இங்கு கொடுப்பதும் மலின நட்பு. குணத்துக்காக அன்றி பணத்துக்காக பழகுவது போலி நட்பு.

நட்பு பகையானால் நிம்மதி இராது. பகை நட்பானால் நம்பிக்கை இராது என்பது அனுபவம் தோளில் கை வைத்துச் சொல்லும் நட்பு மொழி.

இதுவரை உணர்ந்தது கிழக்கின் நட்பு! இனிமேல் உற்று நோக்கப் போவது பண்டைய தமிழ் மரபின் நீட்சியற்ற மேற்கின் நட்பு!!

பரஸ்பர புரிதலுடன் கட்டிப் புரளாத குறையாக தன்னினச்சேர்கையில் நாட்டம் அற்ற ஆண்கள் நேர்மையான சினேகிதர்கள் எனின் சகாத்தர் (bromance). ஒருவர் மீது ஒருவருக்கு இனக்கவர்ச்சியோ உடல் கவர்ச்சியோ இல்லாமல் அன்பு பாசம் நட்பு மரியாதை கூடிக் கொண்டே இருக்கும் நட்பு கம்பநமற்றோர் (platonic love). ஆணின் ஆதரவைத் தவிர்த்து உடல் உறவின்றி இரு பெண்கள் சேர்ந்து வாழ்வது மகிலையர் (boston marriage). இவ்விதம் மேற்கின் நட்பிற்கு நேர்பொருள் காட்டக்கூடும் எதிர் காலத் தமிழ்!
அன்று பெயர் தெரியாத பொடியளை பட்டிக்காட்டில் பெரிசுகள் பொடி என வாஞ்சையுடன் அழைத்த பொழுது, வெட்கம் வந்தது. இன்று அமெரிக்க நாகரிகம் அதனையே நட்புடன் buddy என்றழைக்கும் பொழுது, துக்கம் வருகின்றது.

நட்பு தெரியும். ஆனால் பட்பு என்றொரு சொல் நடைமுறையில் உள்ளது தெரியுமா?'கண்டறியாத நட்பு' அல்லது கண்டதும் சுடும் நட்பு என்ற கருத்தில் பழந்தமிழ் அதனை பட்பு (frenemy) என்கின்றது. அது பகைமையும் நட்பும் கொஞ்சம் கொஞ்சம் கலந்த கலவை. சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதெல்லாம் பாதிப்படைய வைப்பது இதன் இயல்பு. இதேபோல நட்பும் எதிரியும் சேர்ந்த நதிரி என்பதே திரிபுபட்டு நாதாரி என இந்திய திரைப்படங்கள் புகட்டும் நல்வார்த்தையாகியதெனவும் நவில்வர். (நாவில் தாரி நாவால் பேசியே கொல்பவன் அல்லது பன்றி மேய்ப்பவன் போன்ற அர்த்தங்களும் அதற்கு உண்டெனவும் சொல்லப்படுவது வேறு கதை).

உலக உருண்டையின் கணிசமான பகுதி இன்று சிவந்திருப்பதற்குக் காரணமான 1789ம் ஆண்டு பிரன்சுப் புரட்சியுடன் தோழர் (comrade) என்ற சிறப்புச் சொல் இடதுசாரி நட்புலகில் சிவப்புச் சொல் ஆகி சாகாத சரித்திரத்தை சந்திக்க வைக்கின்றது.

உலகம் பூராவும் முன்னொரு காலத்தில் மிகவும் விலாசமாக இருந்த பேனா நட்பு (pen friend) விசாலம் இழந்து போக தற்பொழுது நட்புடன் உலகை சுற்ற வைக்கின்றது மின்னணு யுகத்தின் தொழில்நுட்ப வளர்ச்சி. கண்டம் விட்டு கண்டம் கடிதங்கள் பறந்து நட்பு வளர்த்த அந்தக் காலம் போய் கனிவான சொல்லையும் நேசம் துளிர்க்கும் பார்வையையும் கணத்திலேயே நட்பாக்கி வலையத் தளங்களில் வாழ்கின்றது. மின்னஞ்சல் (e-mail), முகநூல் (face-book), ட்விட்டர் (twitter) போன்றவை கையில் பிடித்த மீனைப் போல கணிணியிலும் இணையத்திலும் துள்ளுகின்றன.

தமிழ் நட்பின் மாறாத சான்றாக கோப்பெரும் சோழனையும் பிசிராந்தையரையும் சங்ககாலம் இன்னமும் கூற நட்பின் மூலதனமாக கார்ல் மார்க்ஸ் ப்ரெட்ரிக் ஏங்கெல்சை மேற்குலகம் கொண்டாடுகின்றது. அதே போல் கம்பர் - சடையப்ப வள்ளல், கபிலர் - பாரி, காளிதாஸன் - போஜன், துரியோதனன் - கர்ணன் போன்றோரிடமும் காலம் அழிக்காத பக்கங்களில் நட்பு மிளிர்ந்திருந்ததாக ஏட்டிலும் பாட்டிலும் கூறப்படுகின்றது. எல்லாம் சரிதான்! அவ்வாறாக எடுத்துக் காட்டும் நட்பு ஏன் இன்றில்லை என்பதுதான் பலரிடம் உள்ள பதில் காணமுடியாத கேள்வி!

கனடாவிலிருந்து கடந்த 32 ஆண்டுகளுக்குள் சுமார் 132 பத்திரிகைகள் அல்லது சஞ்சிகைகள் தமிழில் வெளிவந்துள்ளன. ஆனால் அவற்றுள் ஒன்று தன்னும் நட்பு சார்ந்த பெயர்களை கொண்டிருக்கவில்லை!
அச்சடித்துக் கொள்கின்றது இதயம்! - தவறு, அடித்துக் கொள்கின்றது இதயம்!! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா விவேகானந்தன்

# நாமாக நாமிருந்த காலம்

16

திசைகளைத் தொலைத்த
பெருங்காட்டுக்குள் வழி தவறிய
மந்தைகளைப் போன்று
வாழத்தலைப்பட்ட துயரம் நம்
முன்னோடிகளுக்கு நிறையவே
இருந்தது. விரும்பியும் விரும்பாமலும்
இப்புலங்களிற் கால் பதித்தோரில்
பெரும்பாலானோர் இப் புதிய இருப்பைக் கொண்டாடினர் என்பதற்கான பதிவுகள் இல்லை. தாயகத்தில் நிலத்திலும் மனத்திலும் எல்லைகள் வகுத்துத் தனிப்பிரிவுகளாக வாழ்ந்தோர் பலரும் புலம்பெயர்ந்தபின், எதிர்கொண்ட துயரங்களாலும், இழப்புகள் பற்றிய ஒத்த உணர்வாலும் ஒன்றுபட்டேயிருந்தனர்.

வாழ்புலத்தில் நேர்பட எதிர்ப்பட்ட துன்பங்களை விடவும், உணர்வுகளில் ஊறிக்கிடந்து இதயத்தை வதைத்த தலையான துயரம் தாயகம் பற்றிய நினைவுகளே. ஆங்கிலத்தில் Home sick என அழைக்கப்பட்ட இத்தாக்கம் நம்மவரிடையே குறிப்பிடத்தக்களவு பாதிப்புகளை ஏற்படுத்தியது.

தம் உணர்வுகளைப் படைப்பாக்க முயன்றோர் பலரும் தாயகம் சார்ந்த இழப்புணர்வுகளையே பெரிதும் வெளிப்படுத்தியிருக்கின்றனர். மண்ணைப் பிரிந்த ஏக்கம் துயரங்களைத் தந்தபோதும், கடந்தகால நினைவுகளால் வருடப்பட்டு வாழ்ந்தோரும் இருந்தனர்.

குடும்பம், சுற்றாடல், ஊர், நட்பு, பள்ளிவாழ்வு, தாய்மண் எனப் பல்வகை உணர்வுகள் இழப்புணர்வின் தளங்களாக இருந்தன.

நீயும் நானும்
எங்களோடு எல்லாமும்
கைகோர்த்து கையசைத்துப்
புலர்வதற்கும் பொழுது சாய்வதற்கும்
புதிது புதிதாக அர்த்தம்
உண்டென்று அறிவுறுத்தும்

குறுகிய வீதிகள், சந்துகள்
மண் ஒழுங்கைகள் எல்லாமே
பதித்த எம் சுவடுகளைப்
பாதுகாத்து வைத்திருக்குமோ?

சின்னக் குடிசைக்குள்
உலகை வசப்படுத்திய
அந்தக் காலங்களில்தான்
நாம் நாமாகவிருந்தோம்.

பின் நிஜங்களைத் தொலைத்துவிட்டு
நிழல் தேடி.... நிழல் தேடி...."
இரண்டாம் பிறப்பு பக் 2

இவ்வாறு தன் தாய்மண் பிரிவைப் பதிவுசெய்கின்றார் கவிஞர் அருந்ததி. பாதணிகளற்ற வெற்றுக்கால்கள் தாய்ப்புலத்து வீதிப்புழுதிகளில் பதித்த சுவடுகள் இப்போதும் இருக்குமா? என்கின்ற கவிஞரின் ஏக்கம் எல்லோருக்கும் பொதுவானதாக இருந்தது.

இராணுவக் கெடுபிடிகளுக்குள் பயந்து பற்றைக் காடுகளுக்குள் பல நாட்கள் படுத்திருந்தபோது பெற்ற இன்பம் வாழ்புலத்து பட்டுப்பஞ்சணைகளில் கிடைக்கவில்லை எனப் பலரும் புலம்பியதை எம் செவிகள் கேட்டிருக்கின்றன.

கோழியின் இறகுச்சூட்டிற்குள் இதம் காணும் குஞ்சுகளைப்போல், தாயின் மடிக்குள் வாழ்ந்து பழக்கப்பட்ட பிள்ளைகள் பலரும் பலவந்தமாய் வெளிநாடுகளை நோக்கி வீசியெறியப்பட்டனர். தொப்புள் கொடி அப்போதுதான் அறுந்தது போன்ற வலியோடு வாழத்தலைப்பட்டோரின் தாய்மைப் பிரிவு ஆறாத் துயராய் வெளிப்பட்டது.

கோரப்பனிக்குளிரில்
உதடுகள் வெடித்து
உதிரம் சொட்ட
உறக்கமிழந்த அந்த இரவில்
ஸ்ரேலிங் பவுண்களை
எண்ணுகிற போது
உனது நினைவுகள்
என்னை ஒலமிட்டு அழவைக்கும்.
இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கு,
அப்போ எனக்கு
பன்னிரண்டு வயதிருக்கும்.
நம்வீட்டு முன்றலிலே
நான் தடுக்கி விழுந்து,
என் உதட்டின் மெல்லிதான கீறலுக்கே
நீ ஓவென்று அழுதாயே
இங்கே எனக்காய்
அழுவதற்கு யாரிருக்கார்
இந்த ஐரோப்பிய நாட்டில்
அகதியாய்,
அனாதையாய்,
வெந்து போகிறது மனது..."

தன் தாயின் அருகின்மை பற்றி'ஏக்கம் என்னும் தலைப்பில் ராஜாத்தி எழுதிய கவிதை இது. அந்நியமும் வெறுமையும் சுற்றிச் சூழ்ந்து கிடக்க, மாசற்ற தாயின் பேரன்பிற்காக ஏங்கும் இதயங்கள் நடைப்பிணங்களாகவே நடந்தன.

எப்போது என் நாட்டில்
எப்போது என் வீட்டில்
எப்போது உன் மடியில்..." புலம்பெயர் கவிதை பக் 48
என இவர் கவிதையை நிறைவு செய்யும்போது மண்ணைப் பிரிந்த துயர் உச்சம் தொடுகின்றது.
நந்தவனம் வழியே நடைபயின்று வந்தோரல்ல, நம் வாழ்புலத்து முன்னோடிகள். உயிர் பிழிந்த சோகங்களை வழித்தெறிந்தபடி, எமக்காக வழிகளைச் சமைத்தவர்களாக வாழ்ந்தனர் எம் முன்னோர்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## கேள்வி: 'வாட்ஸ் அப்'? பதில்: 1300 டாலர் தண்டம்

வாகனத் தரிப்பில் ஒழுங்கீனமாக நின்ற ஒரு காரின் அருகில் சென்ற பொலிஸைப் பார்த்து, 'வாட்ஸ் அப்' (What's up?) என்று கேட்டார் அதன் சாரதி.

வில்லியம் றொபின்சன் (28) என்ற இளைஞர்ஒரு தடவையல்ல, பல தடவை அப்படிக் கேட்டதால் வந்த வினை, மதுப் பரிசோதனைக்கு அவரை உட்படுத்தினார் பொலிஸ் உத்தியோகத்தர்.

அளவுக்கு மீறிய மதுப்பாவனையில் அவர் இருந்தது தெரிய வந்ததால் நீதிமன்றில் வழக்குத் தாக்கலானது. 'நடந்தது என்னவென்று தெரியாது' என்று கூறிய 'வாட்ஸ் அப்' இளைஞருக்கு, நீதிபதி 1300 டாலர் தண்டம் விதித்து சாரதி லைசன்ஸையும் ஒரு வருடத்துக்கு இடைநிறுத்தித் தீர்ப்பளித்தார்.

ஒன்ராறியோ சார்னியா பட்டணத்திலுள்ள 'கெற்றில் பொயின்ற்' நீதிமன்றில் கடந்த மாதம் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

## சொத்துக் குவிப்பு வழக்கின் புரட்சிப் படலம் பாரீர்

39க்கு 37ல் பெற்ற வெற்றியைக்கூட மகிழ்ச்சியாக அனுபவிக்க முடியாது அடிக்கடி கர்நாடகம் ஓடிக்கொண்டே இருக்கிறார் தமிழக அம்மையார்.

இந்திய நீதித்துறையில் இவர் மீதான சொத்துக்கு குவிப்பு வழக்கு ஒரு சவாலாக மாறியுள்ளது.

இந்த வழக்குப் பதிவான பிறகு இந்திய நாடாளுமன்றத்துக்கு ஐந்து தேர்தல்கள் நடந்துவிட்டது. தமிழக சட்ட மன்றம் மூன்று தேர்தல்களைச் சந்தித்து விட்டது.

உச்ச நீதிமன்றுக்கு 16 தலைமை நீதிபதிகள் மாறிவிட்டனர். சென்னை உயர்நீதிமன்றுக்கு 17 தலைமை நீதிபதிகள் வந்து போய்விட்டனர்.

49 வயதிலிருந்த முதல்வர் ஜெயலலிதா, பொன்விழாவின் பின் மணி விழா கண்டு ஆறாண்டுகளாகி விட்டன. அரச வழக்கறிஞர்களும், விசாரணை அதிகாரிகளும் பலர் ஓய்வு பெற்று விட்டனர். சிலர் 'மேலுலகம்' சென்று ஆண்டுகள் பலவாகிவிட்டது.

இது 'கின்னஸ்' சாதனையில்லையா?

## வாகன நெரிசல் இல்லாது ஓடிக்கொண்டேயிருக்கும் ....

"ஐந்து கிலோ மீட்டர் ஓடியாச்சு... இப்போ ஏழு கிலோ மீட்டர்....இந்தா, பத்துக் கிலோ மீட்டர் முடித்து விட்டேன்".
ஓடிக் கொண்டேயிருந்தவன் இப்படிக் கூறியவாறு. மேலும் ஓடியவாறிருந்தான்.

"எங்கே போகிறாய்?" என்று கேட்டபோது அவனிடமிருந்து பதில் வரவில்லை. 30 நிமிடங்களில் 10 கிலோ மீட்டர் ஓடியதை அவன் சாதனையாகச் சொன்னான்.

அவன் ஓடியது வீதியில் அல்ல. ஜிம்மில் உள்ள ட்ரெட்மில்லில். 'எங்கே போகிறோம் என்று தெரியாத ஓட்டம் இது' என்றான் கேள்வி கேட்ட நண்பன்.

"இது வாகன நெரிசல் இல்லாத ஓட்டம்" என்றான் ஓடிக்கொண்டிருந்தவன்.

## உலகின் கேவலமான ....... பட்டயமும் 1500 டாலரும்!



வீட்டு எஜமானால் சரியாகப் பராமரிக்கப்படாததால் அவரிடமிருந்து பறிக்கப்பட்டு 'ஷெல்டரில்' தங்க வைக்கப்பட்டிருந்த அந்த நாய்க்கு, இப்படியொரு அதிர்ஷ்டம் வருமென்று எவரும் எதிர்பார்க்கவில்லை.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடத்த 'உலகின் மிகக்கேவலமான நாய்' (World's Ugliest Dog) போட்டியில் இந்த நாய் வெற்றி பெற்று 1500 டாலர் பரிசும், 4 அடி உயரமான பட்டயமும் பெற்றுள்ளது.

அத்துடன் வடகரோலினாவைச் சேர்ந்த சான்ட்லர் என்ற கருணையுள்ளம் கொண்ட புதிய எஜமான் ஒருவரும் இந்த நாய்க்குக் கிடைத்துள்ளது.

'அதிர்ஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொண்டும் வரலாம்' என்பது இந்த நாயைப் பொறுத்தளவில் நிஜமாகிவிட்டது.

## ஆஸ்தான சோதிடருக்கு அவரது கஷ்டகாலம்...

மகிந்த ராஜபக்ஷவின் ஆஸ்தான சோதிடர் சுமணதாச அபேகுணவர்த்தன. இவர் வளமாக இருக்க வேண்டும் என்பதற்காக தேசிய சேமிப்பு வங்கியில் இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் காலியிலிருந்து தமது உத்தியோகபூர்வ காரில் இவர் கொழும்பு செல்லும்போது விபத்தில் சிக்கி சிறு காயங்களுடன் தப்பினார். கடந்த மாதம் சேமிப்பு வங்கியின் வளவில் தமது வாகனத்தில் இவர் ஏறும்போது மேலிருந்து செங்கற்கள் சரிந்து வீழ்ந்ததால் கார் முற்றாகச் சேதமானது. சோதிடருக்குக் காயங்கள்.

மகிந்தவுக்குக் கஷ்டகாலம் அறிந்து கூறும் சோதிடருக்குத் தமது கஷ்ட காலத்தை அறிய முடியாதிருப்பது ஏனோ?

## கலைஞருக்கான ஆப்பில் குஷ்புவுக்கு அடுத்து கனியா?

தலைமைப் பதவியைக் கைப்பற்றுவதில் வெறிகொண்டு அலையும் ஸ்டாலின், அது உடனடியாக நிறைவேறாத நிலையில் கலைஞருக்கு நெருக்கமானவர்களைக் குறி வைத்துச் செயற்படுகிறார்.

இறுதியாக அகப்பட்டவர், "என் வழி தலைவர் வழி' என்று கலைஞரைப் பார்த்துக் கூறிய குஷ்பு. கலைஞரின் விசுவாசிகள் குழுவுக்கு நிகராகத் தமக்கென ஒரு குழுவை உருவாக்கி வரும் ஸ்டாலின், அடுத்து கனிமொழிக்கு கல்தா கொடுக்கவுள்ளாராம்.

பாவம் முதியவர்! முற்பகலில் செய்தவைகளை (எம். ஜி. ஆர், நெடுஞ்செழியன் என்று பலருக்கு) பிற்பகலில் அனுபவிக்க ஆரம்பித்துள்ளார்.

**உதாசனன்**
**உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ராஜ்மோகன்

# பணிலமாடம் 4

## மனிட்ரியுலின் ஐலன்ட்
## Manitoulin Island

ஒன்ராறியோ சுற்றுலாப் பயணத்துறையை தொலைபேசியில் அழைத்து, இந்தமுறை எங்களுக்குப் பணப் புழக்கம் கொஞ்சம் குறைவாக உள்ளது, ஆகையால் பட்ஜெட் கொஞ்சம் குறைவாக உள்ளதும் மனதிற்கு நிம்மதியைத் தரக்-கூடியதுமான நல்லதொரு அமைதியான சுற்றுலா போகும் இடம் ஒன்றைக் கூறுங்கள் என்று கேட்டால் அனேகமாக அவர்கள் மனிட்ரியுலின் ஐலன்ட் (Manitoulin Island) ஐத்தான் உங்களுக்குத் தெரிவு செய்வார்கள்.

எங்கே நிம்மதி எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும் என்று பாடுவோருக்கான தற்காலிகமான திறந்தவெளி அரங்குதான் இந்த மனிட்ரியுலின் ஐலன்ட். அழகிய சூரிய உதயத்துடன் அமைதியாக ஆரம்பிக்கும் உங்கள் பொழுது வெண் மணல் வெளிகளுடனும், ஏரிக்கரைப் பூங்காற்றுடனும், அழகிய நீர்வீழ்ச்சியுடனும், இயற்கை தரும் வனப்புகளுடனும் கழிந்து முழுமையாக முற்றுப்பெறும்.
இயற்கைக் காட்சிகளை நேசித்து அதன் அழகில் ஆனந்தம் கொள்ளும் விருப்பமுடையவராக நீங்கள் இருந்தால் மனிட்ரியுலின் ஐலன்ட் உங்களுக்காகக் காத்துக் கொண்டு இருக்கின்றது.
புகைப்படத்துறையை பொழுதுபோக்காகக் கொண்டவர்களுக்கு இது ஒரு தேன் விருந்து படைக்கும் இடம். சூரிய உதயம், நீர்வீழ்ச்சி, வெண் மணல் கடற்கரை, வெளிச்ச வீடு, மறைந்தோடும் மான்கள், சூரிய அஸ்தமனம், ஒற்றையடிப் பாதைகள், இரவுநேர வானம் என்று இயற்கை தரும் அழகியலை அடுக்கிக்கொண்டே போகலாம்.

மனிட்ரியுலின் ஐலன்ட் ஒன்ராறியோவின் வடக்கில் லேக் கியுறோனில் (Lake Huron) அமைந்திருக்கும் ஒரு அழகிய சிறிய தீவு. உலகிலே நல்ல தண்ணீர் சூழவுள்ள முதலாவது மிகப்பெரிய தீவு (Largest fresh water lake island) என்ற பெருமையும் இதற்கு உண்டு.

ரொறன்ரோவில் இருந்து கிட்டத்தட்ட 7 மணித்தியாலங்கள் பயணம் செய்ய வேண்டிய இந்தத் தீவுக்கு தரைவழிப் பாதை மற்றும் ஏரி வழிப்பாதை (Chi-Cheemaun ferry) என்று இருவழிப் பாதைகள் உள்ளன. பெரியில் (Ferry) வாகனங்களை ஏற்றி இயற்கைக் காட்சிகளை அனுபவித்த வண்ணம் பயணம் செய்வது புதுவித அனுபவமாக இருக்கும்.
கிறிஸ்டல் கிளியர் (Crystal clear) ஆகக் காணப்படும் வெண் மணல் கொண்ட சுத்தமான ஏரியிலே குளித்தெழுந்து, கரையோரங்களில் தூண்டிலுடன் மீன்களுக்காக அலைந்து திரிந்து, சாலையோர சோலைகளில் அன்புத் துணையுடன் கை கோர்த்து நடை பயின்று, மன அழுத்தங்கள் ஏதுமில்லாமல் கழிந்து போகும் மணித்துளிப் பொழுதுகள் மறக்கப்பட முடியாதவை.

சிலவேளைகளில் மனிட்ரியுலின் ஐலன்டின் வாசிகள் வந்து, நீங்கள் சப்வேயில் (Subway) போயிருக்கின்றீர்களா? சீ என் ரவர் மற்றும் ரொறன்ரோ அக்குவாரியம் (Ripley's Aquarium of Canada) பார்த்திருக்கின்றீர்களா? புளூஜேஸ் (Blue Jays) ஆட்டங்களை ஸ்கைடோமில் (தற்போதைய Rogers center) பார்த்திருக்கின்றீர்களா? என்று கூடக் கேட்கலாம் ஆனால், அவர்களின் வாழ்வியல் வசந்தங்களை நகர வாழ்க்கையுடன் ஓப்பிட்டுக் கொள்ள முடிவதில்லை. சில பகுதிகளில் எரிபொருள் நிலையங்களைத் தேடிப்போகும்போது இங்கிருக்கும் எரிபொருள் நிலையங்களின் வடிவமைப்பை நினைப்பில் வைத்துச் சென்றீர்களானால் கட்டாயம் தவற விட்டுவிடுவீர்கள்.

இந்த அழகிய வித்தியாசமான மனிட்ரியுலின் ஐலன்ட், இலங்கையின் வடபகுதியில் அமைந்திருக்கும் நெடுந்தீவை ஞாபகத்திற்குக் கொண்டு வருகின்றது. நெடுந்தீவின் உப்புக் காற்றும், உவரி நிலமும், வெண் மணல் கடற்கரைகளும், வானோங்கும் பனைகளும், வளம் நிறை தென்னைகளும், ஆநிரைகளும், மாநிரைகளும் மனதை விட்டு என்றும் அகலமாட்டாத அற்புதமான காட்சிகள். குறிகாட்டுவானில் ஆரம்பித்து ஏழாற்றுப் பிரிவின் சுழிகண்டு மாவிலி துறைமுகத்தை அடையும் கடல்வழிப் பயணம் சிறு பயம் கலந்த இனிமையான அனுபவம்.

இந்து மகா சமுத்திரத்தால் சூழப்பட்ட 'பசுந்தீவு' எனப்படும் நெடுந்தீவின் பாரம்பரியம் மிக நீண்டது. நீண்டு விரிந்திருக்கும் நீலக் கடல் அதனது ஆடை. நீல மேகம் அதனது மேடை. கரையெங்கும் கடல்படு திரவியங்களான பவளக் கற்பாரகளும், வலம்புரிச் சங்குகளும், முத்துச் சிற்பிகளும் நிறைந்து காணப்படும்.
நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும், கல்வி வளமும் மட்டுமல்லாமல் பெருமை தரும் விருந்தோம்பும் பண்பாட்டையும் கூடவே கொண்ட நெடுந்தீவு மக்களின் அன்பான வரவேற்பு மனதிற்கு இதம் தரும் சுகமாக இருக்கும்.

பண்டைக் காலத்தில் இத்தீவு சரித்திரப் பிரசித்தி பெற்ற நிகழ்வுகளைக் கண்டுள்ளதற்கான சான்றுகளை இன்று இங்குள்ள வெடியரசன் கோட்டை, அனுமார் திடல், வில்லூன்றி, வீமனடி, குவிந்தா, பெரியதுறை போன்ற பல இடங்களின் வரலாறுகள் மூலம் நாம் அறிந்து கொள்ள முடியும்.

கோல எழிலுடைய நீலக் கடலுடுத்த நெடுந்தீவு மேலும் பல அபிவிருத்திகள் கண்டு, அங்கு நாம் நிம்மதியாகச் சுற்றுலாப் பயணம் செய்யும் காலம் வெகு தூரத்தில் இல்லை.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# திரை இசை இரகசியம்!

திரைப்படப் பாடல்களைச் சிலர் கருத்துக்காக விரும்புவார்கள்! சிலர் காட்சிக்காக விரும்புவார்கள்! சிலர் இசைக்காக விரும்புவார்கள்! இன்னும் சிலர் பாடியவர்கள் குரலுக்காக விரும்புவார்கள்! ஆனால் விரல்விட்டு எண்ணக் கூடிய சிலர் மனங்களில் தான் இந்தப் பாடல்கள் வேறுபட்ட இலக்கியச் சிந்தனைகளைத் தூண்டும்!

கருத்து இசை குரல் என்பதையெல்லாம் கடந்து சில திரையிசைப் பாடல்களை மிகவும் அருகிலே சென்று பார்த்தால் அவை மனித உள்ளங்களையும் கடந்து உயிரோடு பேசுவதைக் காணலாம்!

தில்லானா மோகனாம்பாள் படத்தில் வரும் மறைந்து இருந்தே பார்க்கும் மர்மம் என்ன என்ற பாடலை ஆயிரம் தடவைகளுக்கு கேட்டவர்களும் பார்த்து இரசித்தவர்களும் இருப்பார்கள்! அவர்களிடம் போய் இந்தப் பாட்டிலே மோகத்திலே என்னை மூழ்க வைத்து என்று ஒரு வரி வருகின்றதே! அதற்கு பத்மினி தன் தலைக்கு மேலே கையை உயர்த்தி ஒரு அபிநயம் பிடித்துக் காட்டுவார் அதைக் கவனித்தீர்களா? என்று கேட்டால் அதிகமானவர்கள் கையைப் பிசைவார்கள்! கவனித்திருக்க மாட்டார்கள்!

அது பாம்பின் கால் பாம்பறியும் என்பது போல கலையுள்ளம் படைத்தவர்கள் கண்களுக்குத் தெரியும் காட்சி! அது போல சில இலக்கணம் சார்ந்த செய்திகளை இனங்காட்டி இவற்றைக் கவனிக்காமல் இருந்து விட்டோமே என்ற உணர்வை ஒருசிலரின் மனங்களிலாவது ஏற்படுத்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்!

தமிழிலே இருந்து இலக்கணத்திலே பேசப்பட்டு இன்று முற்றிலும் வழக்கொழிந்து போன சமாச்சாரம் அளபெடை என்பது! அதாவது எழுத்துக்கள் தமக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒலி அளவிலும் பார்க்க கூடி ஒலித்தல் தான் அளபெடை என்று இலகுவாக சொல்லி விடலாம்! அதன் வரி வடிவத்தைத் திருக்குறளில் இன்றும் காணலாம்!

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றங்கு
எடுப்பதூஉம் எல்லாம் மழை

கொடுப்பது எடுப்பது என்ற இரண்டு சொற்களும் ஓசைக்காக கொடுப்பதூஉம் எடுப்பதூஉம் என்று நீண்டு அளபெடுத்து வருவதால் அளபெடை! இந்த அளபெடை-யயின் சுவையை திரையிசைப் பாடல்களில் எங்காவது கேட்டு உணர்ந்து இருக்கிறீர்களா? அது அளபெடை என்று தெரிந்து இரசித்திருக்கிறீர்களா? இல்லையென்றால் பாசம் என்ற படத்திலே ஸ்ரீநிவாஸ் சுசீலா பாடிய பால் வண்ணம் பருவம் கண்டு வேல் வண்ணம் விழிகள் கண்டு என்ற பாடலைக் கேளுங்கள்! வரிக்கு வரி சொற்கள் அளபெடுத்து சிலிர்க்கின்றன!

காஆர் வண்ணக் கூந்தல் தொட்டு தேஏர் வண்ண மேனி தொட்டு
பூஉ வண்ணப் பாடம் சொல்ல எண்ணம் இல்லையா
என்று சுசீலா அளபெடுத்து உச்சரிப்பதும் அதற்கு இணையாக ஸ்ரீநிவாஸ்
நாஅள் கண்டு மாலையிட்டு நாஅன் உன்னைத் தோளில் வைத்து
ஊஉர்வலம் போய்வர ஆசையில்லையா

என்று பாடுவதும் கேளுங்கள்! அதுவும் தனிமையில் அமைதியாக இருந்து கேளுங்கள்! அப்போது இனம் புரியாத இன்னொரு உலகத்துக்குச் சென்று வருவீர்கள்!

இந்தப் பாடலை எழுதிய கண்ணதாசன் சொற்களை அளபெடுத்து எழுதியது கிடையாது! அவர் வெறுமனே கார் வண்ணக் கூந்தல் தொட்டு தேர் வண்ண மேனி தொட்டு என்று சாதாரணமாகத்தான் எழுதினார்! ஆனால் விஸ்வநாதன் காஅர் வண்ணக் கூந்தல் என்று அளவெடுக்க வைத்து இசையமைத்தார்! இது திரை இசையில் மறைந்து கிடக்கும் ஒரு இரகசியம்!

திரை இசையில் சொற்கள் அளபெடுத்துத் தான் வரும் என்பதில்லை! தமக்கு உரிய ஒலி அளவில் நின்று குறைந்தும் வரும்! அதைத் தமிழ் இலக்கணம் குறுக்கங்கள் என்று சொல்லும்! ஐ குறைந்து வந்தால் ஐகார குறுக்கம் ம குறைந்து ஒலித்தால் மகரக் குறுக்கம்! அது போல பகர குறுக்கம் ஔகாரக் குறுக்கம் ஆய்தக் குறுக்கம் என்றெல்லாம் தமிழில் இருந்து வழக்கு ஒழிந்து அவை போய்விட்டன!

இசைக்காக குறுக்கங்களோடு விளையாடும் ஒரு இனிய குரல் சுசீலாவினுடையது! ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக திரைத்துறையில் சாகா வரம் பெற்று அந்தக் குரல் நிற்கின்றது என்றால் அதற்கு இனிமை மட்டும் காரணம் அல்ல. இலக்கணமும் காரணம்! எழுத்துக்களை இசைக்காக தான் விரும்பும் இடத்தில் நிறுத்தும் கலையை சுசீலா நன்றாக உணர்ந்திருந்தார்!

பேசும் போது நிறுத்துவது இலகு! ஆனால் பாடும் போது? பாடிக்கொண்டு இருக்கும் போது திடீரென ஒலி அளவை சொல்லுக்கு அல்ல அதில் உள்ள எழுத்துக்குக் குறைப்பது என்பது எல்லோராலும் செய்ய முடியாதது! அதைச் சுசீலா சாதாரணமாகச் செய்தார்! அதனால் நிலைத்து நின்றார்!
கர்ணன் படத்திலே கண்கள் எங்கே நெஞ்சமும் அங்கே என்ற சுசீலாவின் பாடலை பலரும் பலமுறை கேட்டு இருக்கின்றோம்! அதிலே இந்தக் குறுக்கங்களைச் செய்து காட்டுவார் சுசீலா! எப்படி?
மணிகொண்ட சரமொன்று அனல் கொண்டு வெடிக்கும்! என்ற இந்த வரியை இரண்டு முறை அவர் பாடுவார்! முதல் முறை பாடும் போது வெடிக்கும் என்ற சொல்லின் இறுதியில் வரும் ம் என்ற எழுத்து ம் என்று உச்சரிக்கப்படாமல் வெடிக்குங் என்று மகரக் குறுக்கமாக முழுமை பெறாமல் வரும்! உடனேயே திரும்ப அதே வரி வரும் போது வெடிக்கும் என்று அறுத்துறுத்து ம் முழுச் சத்தத்தோடு முற்றி வரும்! கேட்டுப் பாருங்கள் இந்த இரகசியத்தை! மிகவும் நுண்ணிய ஒலி வேறுபாடு உயிரோட்டமான இசையாகி விடும்!

அது போல அதே பாட்டில் இனமென்ன குணமென்ன குலமென்ன அறியேன்! திரும்பவும் குலமென்ன அறியேன்! அறியேன் என்பதில் வரும் இறுதி ன் முதலில் தேய்ந்து வரும்! பின்பு முழுமையாக வரும்! இப்படி எத்தனையோ இலக்கண விடயங்களைச் செதுக்கித்தான் திரை இசை உருவாக்கப்படுகின்றது!
அம்பிகாபதி படத்தில் ஒரு சொல் இசைக்காக பல துண்டுகளாக வெட்டப்பட்டு வருவதும் இன்னொரு திரை இரகசியம்! வாடா மலரே அருள் தேனே என்று இராமநாதன் முகாரி இராகத்தில் இசையமைக்க பானுமதியும் சௌந்தரராஜனும் பாடினார்கள்! எப்படி?

தாரணி வணங்கும் மன்னன் தனிப்பெரும் தேனே என்ற வாக்கியத்தை தா- ர- ணி- வ-ண-ங்- கு- ம் என்று சௌந்தரராஜன் உடைக்க பானுமதி காவியப் புலவரெல்லாம் களிப்புடன் பாராட்டி என்ற வரியை கா-வி-ய-ப்-பு-ல-வ-ரெ-ல்-லா-ம் என்று தானும் உடைத்து எறிவார்! இவையெல்லாம் கவனியுங்கள்!

குரல் இசை கருத்து காட்சி இந்த நான்கையும் கடந்த இன்னொன்று திரை இசையில் மறைந்து கிடக்கின்றது! அது நயம்! அதைக் கண்டுபிடித்து இரசியுங்கள்! மழை என்பது எல்லோருக்கும் பொதுவானது! ஆனால் வைரமுத்து எனக்குள் பெய்த தனியார் மழையே என்று சொன்னாரே! எத்தனை பேர் இதனைக் கண்டு இரசித்திருப்பார்கள்? பிறருக்குத் தெரியாததெல்லாம் இரகசியம் தானே?●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரு அரவிந்தன்

# உயர்ந்த கோபுரங்கள் 4

நேரம் என்பது எங்கள் வாழ்க்கையோடு ஒன்றாக இணைந்திருப்பது. நேரம் எவ்வளவு முக்கியமானது என்பதை ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையில் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் கட்டாயம் உணர்ந்திருப்பார்கள்.'கடந்து போன நேரமும், தவறவிட்ட சந்தர்ப்பமும் திரும்பக் கிடைப்பதில்லை' என்றொரு பழமொழிகூட உண்டு. நேரத்தைத் தவறவிட்டவர்கள் அதனால் தாங்கள் அனுபவித்த கஷ்டங்களைச் சொல்லி அழுததைப் பார்த்திருக்கிறேன்.



இப்பொழுதெல்லாம் தொழில்நுட்ப வசதிகள் காரணமாக நேரம் பார்ப்பதற்குப் பல வழிகள் இருக்கின்றன. ஆனால் அன்று அந்த வசதிகள் எல்லாம் இருக்கவில்லை. எல்லோரிடமும் கைக்கடிகாரம் இருக்கவில்லை. இப்போது இருப்பது போன்ற அலைபேசிகள் அந்த நாட்களில் பாவனையில் இருக்கவில்லை. யாழ்ப்பாண நகர மக்களுக்கும், ஏதாவது வேலை நிமிர்த்தம் அங்கு சென்று வருவோருக்கும் நேரத்தை அறிந்து கொள்ள அந்த நாட்களில் பெரிதும் உதவியாக இருந்தது யாழ்ப்பாண நகரத்தில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரம்தான்.

இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு அருகே, பருத்துறை வீதி தொடங்கும் சந்தியில் இந்த மணிக் கூட்டுக் கோபுரம் தலை நிமிர்ந்து நிற்கின்றது. நகரத்தின் முக்கிய இடங்களான வேம்படி மகளிர் கல்லூரி, வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் நூலகம், துரையப்பா விளையாட்டு மைதானம், 1625 ஆம் ஆண்டு போத்துக்கீசரால் கட்டப்பட்டு, 1658 இல் ஒல்லாந்தரால் திருத்தி அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கோட்டை ஆகியன இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தைச் சுற்றிவர இருக்கின்றன. யாழ் நகரின் வரலாற்றை பிரதி-பலிக்கும் இந்த மணிக்கூட்டுக்கோபுரம் தமிழ் மக்களின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்து நிற்கின்றது. இந்த மணிக்கூட்டுக்கோபுரம் யாழ் நகரின் முக்கிய கேந்திர நிலையத்தில் அமைந்து இருப்பது மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தின் ஒரு அடையாளச் சின்னமாகவும் விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலமான 1875 ஆம் ஆண்டு வேல்ஸ் இளவரசர் இலங்கைக்கு வருகை தருவதாக இருந்தபோது அவரது வருகையின் ஞாபகமாக ஏதாவது நினைவுச்சின்னம் ஒன்றை எழுப்ப அதற்காக அமைக்கப்பட்ட குழு தீர்மானித்தது. அதன்படி மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்று கட்டுவதாகத் தீர்மானித்து 1880ல் மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்று கட்டப்பட்டது. இக் கோபுரத்திற்கான வடிவமைப்பை அப்போது அரசாங்க கட்டிடக் கலைஞராக இருந்த ஜே.ஜி. சிமித்தர் என்பவர் செய்திருந்தார். அதற்கான மணிக்கூடு ஒன்று 1882 ஆம் ஆண்டு செய்யப்பட்டது. அப்போது தேசாதிபதியாக இருந்த ஜேம்ஸ் லோங்டன் என்பவரே இந்த மணிக்கூட்டுக் கோபுரத்திற்கான மணிக்கூட்டை அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார். உள்ளூர் யுத்தம் காரணமாக கோட்டையில் தங்கியிருந்த இராணுவம் ஏவிய செல் குண்டுகள் காரணமாக இந்த மணிக்கூட்டுக் கோபுரம் பாதிக்கப்பட்டு அதனால் சேதமடைந்திருந்தது.

குடிமனைகள் மீது செல் குண்டுகள் விழுந்து உயிர் சேதங்கள் ஏற்பட்டதால் அதைத் தடுக்கப் போராளிகள் முன்னெச்சரிக்கை ஒலி எழுப்பும் முறை ஒன்றை நகரம் முழுவதும் நடைமுறைப்படுத்தினார்கள். அதன்படி எப்பொழுதும் தன்னார்வத் தொண்டர் ஒருவர் இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தில் காவலிருந்து கோட்டைப் பகுதியை அவதானித்த வண்ணம் இருப்பார். இராணுவத்தினர் செல்லடிக்க ஆயத்தங்கள் செய்யும் போது அவர் முன்கூட்டியே அவசர ஒலியை எழுப்புவார். அதனால் பொதுமக்கள் பாதுகாப்பைத் தேடிக்கொள்ளக் கூடியதாக இருந்தது. இதனால் உயிர் சேதங்கள் ஓரளவு தடுக்கப்பட்டன.


உயிருக்கும் உடைமைக்குமான சேதங்களைத் தடுப்பதில் எப்படி கற்பகதரு என்று சொல்லப்பட்ட பனை மரங்கள் யாழ்ப்பாணத்து மக்களுக்குப் பாதுகாப்பாக இருந்தனவோ அதே போல இந்த மணிக்கூட்டுக் கோபுரமும் ஒரு வகையில் பாதுகாப்பாக இருந்தது. 1998 இல் துப்பாக்கிச் சன்னங்களால் சித்திரங்கள் வரையப்பட்ட இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தைத் திருத்துவதற்கான செலவை பிரித்தானிய அரசு ஏற்றுத் தேவையான திருத்த வேலைகளைச் செய்திருந்தது. 2002 ஆம் ஆண்டு மீண்டும் பாவனைக்காக பிரித்தானிய உயர் அதிகாரியினால் இது திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிலையில் அந்த மணிக்கூடு பழுதடைந்ததைத் தொடர்ந்து, புதிதாகப் பதவியேற்ற மாநகர சபை அந்த மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு டிஜிற்றல் கடிகாரங்களை பொருத்தும் பணியை டயலொக் நிறுவனத்திடம் வழங்கியிருந்தது. அந்த டிஜிற்றல் கடிகாரமும் அடிக்கடி இயங்காமல் போனதால், டிஜிற்றல் கடிகாரத்தைத் தவிர்த்து மீண்டும் முள் உள்ள கடிகாரத்தைப் பொருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற முதலாவது திருக்குறள் மாநாடு




தமிழீழம், தமிழ்நாடு, மலேஷியா ஆகிய நாடுகளிலிருந்து ஐந்து தமிழறிஞர்கள் பங்குபற்றி உரையாற்றிய திருக்குறள் மாநாடு, கடந்த மாதம் ஆஸ்திரேலிய சிட்னியில் அமைந்துள்ள துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. சிட்னியிலிருந்து வெளிவரும் 'தமிழ் ஓசை' இதழின் சார்பாக அதன் ஆசிரியரும் எழுத்தருமான மாத்தளை சோமுவின் ஏற்பாட்டில் இம்மாநாடு இடம்பெற்றது. அருட்தந்தை அமுதன் அடிகள், தமிழருவி சிவகுமாரன், பேராசிரியர் மறைமலை இலக்குவனார், குறள்நாவலர் சிதம்பரம், நாவுக்கரசர் முருகவேள் சிவச்சந்திரன், கலாநிதி கௌரிபாலன் உட்படப் பலர் இங்கு உரையாற்றினார். நடனம் நாட்டியம் உட்படப் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிம்லி றோட் மெடிக்கல் சென்டர் ஆதரவில் tet தொலைக்காட்சி நடத்திய 'தமிழ் இனி வெல்லும்' சிறுவர் போட்டி நிகழ்ச்சி







கனடாவிலிருந்து பல வருடங்களாக வெளிவரும் 'செந்தாமரை' பத்திரிகையின் சகோதர ஊடக நிறுவனமான tet தொலைக் காட்சிச் சேவை இங்குள்ள சிறார்கள் மத்தியில் தமிழ் வளர்க்கும் நோக்கில் 'தமிழ் இனி வெல்லும்' என்னும் தொடர் போட்டி நிகழ்ச்சியொன்றைப் பத்து வாரங்களுக்கு மேலாக நடத்தியது. ஸ்காபரோவிலுள்ள பிரிம்லி றோட் மெடிக்கல் சென்டரின் உரிமையாளர் டாக்டர் செந்தில்மோகன் தமது தந்தையாரான, முன்னாள் உதவி அரசாங்க அதிபரும் தமிழ்ப்பற்றாளருமான அமரர் சொக்கலிங்கம் நினைவாக இந்தப் போட்டிக்கு அனுசரணையாக ஆதரவு வழங்கினார். 6 வயதுக்கும் 12 வயதுக்-குமிடைப்பட்ட சுமார் இருபது சிறார் இப்போட்டியில் பங்குபற்றினர். வாராவாரம் முதலிடத்தைப் பெற்றவருக்கு தலா நூறு டாலர் வழங்கப்பட்டு சிறுவர்கள் ஊக்கப்படுத்தப்பட்டு வந்தனர். இதன் இறுதிச் சுற்றுப் போட்டி கடந்த மாதம் 22ம் திகதி பிற்பகல் ஸ்காபரோ ராப்ஸ்கொட் வீதியிலுள்ள செந்தாமரைக் கலையர-ங்கில் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் இணைந்ததாக நடைபெற்றது. நிகழ்வின் அனுசரணையாளர் டாக்டர் செந்தில்மோகன் அனைவரையும் வரவேற்று உரையாற்-றினார். பேராசிரியர் அருட்தந்தை ஏ. ஜே. சந்திரகாந்தனும், 'தமிழர் தகவல்' முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வமும் சிறப்புரை நிகழ்த்தினர். 'தமிழ் இனி வெல்லும்' போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு. திரு. பொ. கனகசபாபதி தலைமையிலான குழுவினர் பரிசுகளைக் கையளித்தனர். முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்குப் பெறுமதியான தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. நான்காவது இடத்தைப் பெற்றவருக்கு ஆறுதல் பரிசு வழங்கப்பட்டது. tet நிறுவன அதிபரும் செந்தாமரை பத்திரிகையின் ஆசிரியருமான ராஜீ அரசரத்தினம் நன்றியுரை நிகழ்த்தினார்.

# 'தூறல்' சஞ்சிகையின் ஐந்தாவது ஆண்டு வைபவம்

கனடாவிலிருந்து வெளிவரும் 'தூறல்' சஞ்சிகையின் ஐந்தாவது ஆண்டு விழா கடந்த மாதம் ஸ்காபரோவில் நடைபெற்றது. தமிழகத்தின் பிரபல்யமான கவிஞர்களில் ஒருவரான வைரமுத்து இங்கு பிரதம அதிதியாகப் பங்குபற்றி சிற்நுரை நிகழ்த்தினார். தூறல் சஞ்சிகையின் வெளியீட்டுடன தொடர்பானவர்கள், அதன் படைப்பாளிகள் ஆகியோர் விழாவில் பாராட்டுப் பட்டயம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். (ஒளிப்படம்: செய்தி.கொம்)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியத் தோட்டம் - விருது விழா

## Tamil Literary Garden - Award Ceremony





கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் வருடாந்த விருதுகள் வழங்கும் வைபவம் கடந்த மாதம் 28ம் திகதி சனிக்கிழமை ஸ்காபரோவிலுள்ள 'றடிஷன்' ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்றது. அழைக்கப்படுபவர்கள் மட்டுமே கலந்துகொண்ட இவ்வைபவத்துக்கு இலக்கியத் தோட்டத்தின் தலைவர் பேராசிரியர் செல்வா கனக-நாயகம் தலைமை தாங்கினார். இவ்விழாவில் இயல் விருதினை இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த தியடோர் பாஸ்கரன் பெற்றார். அத்துடன் அவரது சிறப்புரையும் விழாவில் இடம்பெற்றது. இங்கு விருது பெற்ற மற்றைய எழுத்தாளர்கள் விபரம் வருமாறு: சுப்ரமணிய சிறீதரன் (புனைவுப் பரிசு), கீரனூர் ஜாகிர்ராஜா (புனைவுப் பரிசு), மு. புஷ்பராஜன் (அபுனைவுப் பரிசு), இசை (கவிதைப் பரிசு), சி. மோகன் மற்றும் அனிருத்தன் வாசுதேவன் (மொழிபெயர்ப்புக்கான பரிசுகள்), மணி மணிவண்ணன் (தகவல் தொழில்நுட்பப் பரிசு). மாணவர் புலமைப் பரிசிலைப் பெற்றவர்கள் விபரம்: எலினா றொபோறஸ் (ருமேனியா), அருந்ததி றொட்றிகோ.



# 'Canadian Immigrant' சஞ்சிகை நடத்திய சிறந்த குடிவரவாளர் 25 பேர் தெரிவில் தமிழன் வழிகாட்டி 'செந்தி'யும் ஒருவர்






கனடாவிலிருந்து வெளிவரும் 'கனடியன் இமிகிறன்ற்' என்னும் சஞ்சிகை கடந்த சில வருடங்களாகக் கனடியர்கள் மத்தியிலிருந்து வருடாவருடம் 25 பேரை சிறந்த குடிவரவாளராகத் தெரிவு செய்து வருகின்றது. இத்தெரிவுக்கு விண்ணப்பிப்பவர்களிலிருந்து முதற் சுற்றில் 75 பேரைத் தெரிவு செய்து, அவர்களுக்குப் பொதுமக்கள் வாக்களிக்குமாறு கோரப்படுவர். இந்த வருடத்துக்கான தெரிவில், முதல் 25 பேரில் ஒருவராக 'தமிழன் வழிகாட்டி' வெளியீட்டாளரான செந்திலாதன் செல்லையா (செந்தி) தெரிவு செய்யப்பட்டு, அதற்கான பட்டயம் வழங்கிச் சிறப்புச் செய்யப்பட்டார். இவருக்கு நாற்பதாயிரத்துக்கும் அதிகமானவர்கள் வாக்களித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ரொறன்ரோவில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் செந்தி தமது பாரியார் சகிதம் கலந்து தமது பட்டயத்தைப் பெற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழர் தகவல்' தன்னார்வத் தொண்டர்களுக்கு
## ஒன்ராறியோ அரசாங்கத்தின் சேவை விருது



ஒன்ராறியோ அரசாங்கத்தின் வருடாந்த தன்னார்வ தொண்டர் சேவை விருதுகள் வழங்கும் வைபவம் இந்த மாதம் 18ம் திகதி ரொறன்ரோ மத்தியிலுள்ள 'எல்ஜின் கார்டின்' அரங்கில் நடை-பெற்றது. ஐம்பதுக்கும் அதிகமான அமைப்புகளின் 230 தன்னார்வத் தொண்டர்களுக்கு இவ்வைபவத்தில் விருதுகள் வழங்கப்பட்டது. 'தமிழர் தகவல்' சஞ்சிகையை வெளியிடும் தமிழர் தகவல் நிலையத்தின் ஒன்பது தொண்டர்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அனைவருக்கும் ஒன்ராறியோ அரசின் சின்னம் பொறித்த பதக்கமும், மாகாண முதலமைச்சர் கத்லீன் வின் மற்றும் குடிவரவு குடியுரிமை அமைச்சர் மைக்கல் கோட்டே ஆகியோரின் ஒப்பமிடப்பட்ட சான்றிதழும் வழங்கப்பட்டது. தமிழர் தகவல் நிலையத்தின் சார்பில் விருது பெற்றவர்கள் விபரம் வருமாறு: கதிர் துரைசிங்கம், சுப்பிரமணியம் விவேகானந்தன், வாசகன் ரட்ணதுரை, கங்காதரன் கந்தசாமி, பாலமுரளி நாகராஜா, பிரதிஷ்னி மதீஸ்வரன், ஹரிசன் ரவிசங்கர், சின்னத்தம்பி சண்முகராஜா, மீனாட்சி சிவனேஸ்வரலிங்கம். விழாவுக்கு நேரடியாகச் சமுகமளிக்காத சின்னத்தம்பி சண்முகராஜா, மீனாட்சி சிவனேஸ்வரலிங்கம் ஆகியோரின் சான்றிதழும் பதக்கமும் பின்னர் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. கடந்த 20 வருடங்களில் தமிழர் தகவலின் 140க்கும் மேலான தன்னார்வத் தொண்டர்கள் ஒன்ராறியோ அரசின் சேவை விருதினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. (ஒளிப்படங்கள்: கமல் கே. கமலலிங்கம்)


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Brimley Road Medical Centre
# WALK-IN CLINIC & FAMILY PRACTICE

★ புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்
★ ஆண், பெண் குடும்ப மருத்துவர்களுடன் 7 நாட்கள் சேவை

Dr. உதயன் சோமசுந்தரம், MD,CCFP
Dr. சுபாதினி செந்தில் மோகன், MD,CCFP
Dr. நஸ்ரத் கான், MD,CCFP

| | |
|---|---|
| திங்கள் - வியாழன் | 9:00-7:00 |
| வெள்ளி...... | 9:00-5:00 |
| சனி & ஞாயிறு | 9:00-2:00 |

★ ஆய்வுகூடச் சேவை (Life lab)
★ மருந்தகச் சேவை (IDA Pharmacy),
★ இயன் மருத்துவ சேவை (Brimley Physiotherapy)

**(416) 412 3333**

**3333 Brimley Road**
Scarborough, ON M1V 2J7
(Between **Steels** & **McNicoll**)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# ஆத்துமத் துடிப்பும் பதைப்பும்

வைத்தியர்களும் வைத்திய கலாநிதிகளும் கையில் நாடி பிடித்துப் பார்த்து நோயைக் கண்டு வைத்தியம் செய்வர். நாடி சுத்தியென்பது சுவாசம் மூலம் ஓங்கார உட்பொருள் காணல் - சிற்றம்பல நாடிகள் சைவம் சிவத்தோடு தொடர்புடையது என்று கூறினார். சைவம் சிவத்தோடு தொடர்புடையது. சிவத்தோடு தொடர்புடைய சமயம் சைவம். ஆக, சிவத்தோடு தொடர்புடையவர்கள் சைவர். சிவத்தோடு சம்பந்தமானது சைவம். தொடர்பில்லாதவர்கள் தீண்டத்தகாத-வர்கள் என்றார் பண்டிதமணி. எனவே ஆத்மாவின் துடிப்பு அதன் செயற்பாடு மூலம் வெளிப்படும். அடுத்தது காட்டும் பளிங்குபோல் - உள்ளம் கடுத்தது காட்டும் நெஞ்சு. தனம் புரியும் நர்த்தனங்கள், முத்திரைகள் மூலம் பாவங்களை வெளிப்படுத்துவர்.

கம்பன் மிதிலை மாடங்களிலே ஆடிய நாட்டியக்காரர்களின் பாவங்களை வெளிப்படுத்தும்போது "கைவழி நயனஞ்செல்ல, கண்வழி மனமுஞ்செல்ல, ஐயநுண்ணிடையார் சூடக அரங்கு கண்டார்" எனப் பாடியுள்ளார். மனத்தின் தன்மைகளை முகம் காட்டும் இவ்வண்ணமே. ஆத்மத் துடிப்புகள் வெளிப்படுத்தப்படும். குழந்தையின் பசி, பசுவின் தாகம், நாடியின் துடிப்பு எல்லாமே குரலாலும் முகபாவத்தாலும் வெளிப்படுத்தப்படும். பால் நினைந்தூட்டும் தாய், தக்க மாதிரியாகும். நவரசங்கள் நட்டுவாங்கத்தைப் பற்றிப் பேசும். இவ்வண்ணமே பசியும். பசி பொல்லாதது. பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் அல்லவா. மெய்ப்பாடுகள் மூலம் இவை வெளியாகும். உலகமே பசிக்குப் பின்னாலே சுழல்கிறது. பட்டினத்தடிகள் சாணும் வளர்க்க அடியேன்படுந்துயர் சற்றல்லவே என்று மனம் விட்டுப் பாடியுள்ளார். துடிப்பு, பதைப்பு இரண்டும் ஒரு தன்மைத்தனவாம். ஆண்டியானாலும் அரனேயானால் பசி தாங்க மாட்டார்கள். பசியைப் பிணியாகவும் பாவனை செய்துள்ளனர்.

பசி ருசியறியாது. துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு என்பர். உயிரின் அவலங்கள் யாவும் முகபாவத்தால் வெளிப்படும். பசியின் - வறுமையின் தாக்கத்தைப் பலரும் சொல்லியுள்ளனர். மகாகவி பாரதியார் "தனியொருவனுக்கு உணவிலையெனின் இந்தச் சகத்தை அழித்திடுவோம்" என ஆக்ரோசமாய்ப் பாடியுள்ளார். ஒருவருக்குச் சாப்பாடு இல்லையெனின் இப்பூமியையே அழித்திடுவேனென ஆக்ரோஷம் கொண்டார். இப்பாதையிலே வள்ளுவப் பெருந்தகையும்.

இலமென் றசையி இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள்நகும் எனப் பாடினார்.

(1040 குறள்)

இலம் என்று அசையி இருப்பாரைக் காணின் யாம் வறியோமென்று சொல்லி மடிந்திருப்பாரைக் கண்டால் நிலம் என்னும் நல்லாள் நகும். நிலம் என்று உயர்த்துச் சொல்லப்படுகின்ற நல்லாள் தன்னுளே சிரிக்கும். இவ்வண்ணமே "இரந்தும் உயிர் வாழ வேண்டில் பரந்து கெடுக இவ்வுலகியற்றி யான்" என்றோர் குறளும் உண்டு. இறைவன் படைத்த இவ்வுலக மக்கள் இரந்து சாப்பிட வேண்டி வந்தால் - அக்கொடியோன் தானும் அலைந்து திரியட்டும் என்பது இதன் பொருள் ஆகும்.

மக்களின் வாழ்வில் வறுமை பொல்லாதது என்பது ஆன்றோர் கொள்கை. கொடிது கொடிது வறுமை கொடிது என்பது அவ்வை வாக்கு. அப்படி வறுமை வந்தாலும், செம்மையாய் வாழ்வதே சிறப்பு. பிச்சை எடுத்தாயினும் கற்கை நன்று. இப்படி ஆராய்ந்தால் அவர்களின் முகத்திலே எழுதி ஒட்டியது போல இருக்கும்.

மற்றவர்கள் வறுமையாற் துன்பப்பட்டால் விரைந்து சென்று பாதுகாக்க வேண்டும். இந்த இல்லாமையால் ஏற்படும் துடிப்பு - பொல்லாதது. உயிருடன் கூடியதே துடிப்பு. அகத்தின் அழகு முகத்திற் தெரியும். இந்தப் பசி என்னும் ஆத்மத்துடிப்பு பொல்லாதது அன்றோ.

ஷஃருதயா என்பது வடமொழிப் பிரயோகம் அதைத் தமிழிற் சொன்னாற் சம உள்ளம் என்று பொருள்படும். ஏற்றத்தாழ்வு இல்லாத மனோநிலை. எனவே எச்சூழ்நிலையிலும் உயர்வு தாழ்வற்ற சமநிலைதான் வேண்டும். அவ்வண்ணமே எல்லோரின் மனோபக்குவங்களும் சமநிலையிற் தராசு போல இருக்கும் நிலையே அது.

வறியவராயினும் செல்வந்தராயினும் படித்தவராயினும் படியாதவராயினும் பேதா பேதம் இன்றிப் பார்ப்பது இல்லை. அந்தத் துடிப்பு, பதைப்பு, கிள்ளிக் கொண்டிருக்கும் பெரியதோர் விபத்து. நோயினாற் பாதிக்கப்பட்ட நிலை. நோயும் பிணியும் இன்பமும் துன்பமும், சௌக்கியமும், வறுமையும், செம்மையும் ஏற்றத் தாழ்வின்றி மக்கள் மனதில் இடம்பிடித்தபோதும் தாழ்வின்றி மக்கள் மனதில் இடம் பிடித்த போதும் அவற்றினின்று மீள எல்லோருமே முயன்று வெற்றி கண்ட சூழ்நிலையில் சம உள்ளத்துடன் இயங்கிய காலதேச வர்த்தமானம்.

இன்றைய சூழ்நிலையையும் அன்றைய சூழ்நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் சம லயம். ஆக மனத்துடிப்பு பதைபதைப்பு எல்லார் மனோ நிலையிலும் நாடிபிடித்த காலம். இன்று வேறுபட்ட நிலை. சுயநலமில்லாப் பரநலம் செழித்த காலம் இது பொது நீதி அன்று. அகமும் புறமும் ஒன்றான மனித சமுதாயம். இப்படி வாழ்ந்தது துடிப்பும் பதைப்பு அவர்களை வழிநடத்தியது. இன்று இதை உரைத்துப் பார்க்க முடியவில்லை. எனினும் மனிதம் இன்றும் பட்டுப் போகவில்லை. மற்றவருக்காக வாழ்ந்த மனிதநேயம் சலசலத்து ஓடிய காலகட்டம். எனவே செம்மை நலம் சிறந்த பார்வையாம்.

இறைவன் அருட்குடைக்கீ ழெல்லோரும் இன் பநிறைவுற்று வாழ்கநிதம்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7

Scarborough, Ontario M1K 5JB

## Computek College

BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY

Est. 1991

www.computek.edu



We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome

**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ் 77

## கோகுலத்தில் கண்ணன் பிறந்தான்!

சைவமும் வைணவமும் தமிழகத்திலே தோன்றிய சமயங்கள் என்பதை அறிவோம்.
அ) சைவக் கோவில்களின் தலைமையிடம் சிதம்பரம். வைணவக் கோவில்களின் தலைமையிடம் திருவரங்கம். இவை இரண்டுமே தமிழகத்தில் இருக்கின்றன.

ஆ) சைவம் வளர்த்த நாயன்மார்கள் அறுபத்தி மூவரும் தமிழ்நாட்டையே சார்ந்தவர்கள். அவ்வாறே வைணவம் வளர்த்த ஆழ்வார்களும் தமிழ் நாட்டையே சார்ந்தவர்கள்.
இ) ஆகம முறைப்படி தொன்மை இந்தியாவில் கட்டப்பட்ட சிவன் கோயில்கள் ஏறத்தாழ 280 இதில் 235 கோயில்கள் தமிழகத்தில் இருக்கின்றன! ஆகம முறைப்படி தொன்மை இந்தியாவில் கட்டப்பட்ட வைணவக் கோயில்கள் ஏறத்தாழ 108 இல் 96 கோயில்கள் தமிழகத்தில் இருக்கின்றன! தமிழகத்தின் இலட்சினையில் கோயில் கோபுரம் வானளாவ உயர்ந்து நிற்கிறது.

எனவே சைவம் - வைணவ சமயங்களின் கோட்டையாகத் தமிழகமே விளங்கி வருகிறது. இந்த இரண்டு சமயங்களும் மேற்கொண்ட பக்தி இயக்கத்துக்குத் தலைமை தாங்கிய நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடிய தேவாரங்கள், திருவாசகங்கள், திவ்யபிரபந்தங்கள் போன்ற அருட்பாக்களே தமிழ்மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் வாழ்வும் வளமும் சேர்த்தன.

தமிழ் இலக்கியத்தின் பரப்பை, அதன் ஆழ - நீளத்தை இந்த சமய இலக்கியங்களை நீக்கிவிட்டு அல்லது ஒதுக்கிவிட்டுப் பார்க்க முடியாது. ஆழ்வார்கள் பாடிய திவ்யபிரபந்தம் பற்றி எழுதுவுதற்கு இதுவே காரணம் ஆகும்.

திருப்பல்லாண்டு பாடல்களை அடுத்து முதலாம் திருமொழி முதல் பத்தில் பெரியாழ்வார் கண்ணனின் திரு அவதாரச் சிறப்பைப் பாடுகிறார். பெரியாழ்வார் திருமொழியின் இந்த முதல் பத்து முழுதும் திருக்கோட்டியூர் சவுமிய நாராயணப் பெருமாள் மீது பாடப்பட்ட மங்களசாசனம் ஆகும். மங்களசாசனம் என்றால் ஏதேனும் திருத்தலத்தில் இருக்கும் தெய்வத்தைத் தரிசித்து, அந்தத் திருத்தலத்தையும் அங்கு இருக்கும் தெய்வத்தையும் பற்றிப் பாடுவது.

இத்திருக்கோட்டியூர் திருத்தலம் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இத்திருத்தலம் காரைக்குடியில் இருந்து 25 கிமீ தூரத்திலும் உள்ளது. இத்தலத்தின் அருகாமையிலேயே பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, அரியக்குடி, தென்திருப்பதி, கோவிலூர் சிவன் தலம், சிற்பக் கலையின் சிறப்பை உணர்த்தும் காளையார்கோயில் என இன்னும் பல திருக்கோயில்கள் காணப்படுகின்றன.
ஆழ்வார்களின் பாசுர அமைப்பின்படி, 106 திவ்ய தேசங்களில் முதலாவதாகவும், பாண்டிநாட்டு திவ்ய தேசங்கள் 18 இல் ஒன்றாகவும் திகழ்கிறது.

நாராயண மந்திரம் ஓதும் தன் மகன் என்றும் பாராமல், பிரகலாதனைக் கொல்ல முற்படுகிறான்."நாராயணா நாராயணா என்று ஒவ்வொரு நொடியும் நீ அன்புடன் அழைக்கும் உன் கடவுள் நாராயணனைக் காட்டு" என இரணியன், பிரகலாதனிடம் கேட்க,"எம்பெருமான் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்று கூறக் கோபம் கொண்ட இரணியன், தூணை எட்டி உதைத்தான். அப்போது நரசிம்ம அவதாரம் எடுத்த நாராயணன் இரணியனைக் கொன்றார் என்ற புராணக் கதை இந்தக் கோயில் வரலாறோடு பேசப்படுகிறது.
இக் கோயிலுக்கு மேலும் ஒரு சிறப்பு உண்டு. ஓம் நமோ நாராயணா என்னும் திருமந்திரத்தினை உலக மக்கள் அனைவருக்கும் தந்தருளிய தலம் இந்தத் திருக்கோட்டியூர் திருத்தலம் ஆகும். இத் திருமந்திரத்தைத் தெரிந்து கொள்ள ஸ்ரீரங்கத்தில் இருந்து பதினெட்டு முறை நடந்தே திருக்கோட்டியூர் நம்பிகளைக் காண இவ்வூருக்கு வந்து செல்வாராம் இராமனுஜர். பதினெட்டாவது முறை சீடனது பொறுமையைக் கண்டு மகிழ்ச்சி அடைந்த குரு, இக்கோயில் நரசிம்மர் சன்னதி முன்பாக, இந்தத் திருமந்திரத்தை, திருக்கோட்டியூர் நம்பிகள், தனது வம்சத்தினருக்கு மட்டுமே சொல்லித்தரப்படும் இதனை உனக்குச் சொல்லி அருளுகிறேன், நீ யாரிடமும் சொல்லக் கூடாது. அவ்வாறு கூறினால் உன் மண்டை வெடித்து, நீ நரகம் செல்வாய் என இராமனுஜரிடம் சத்தியம் வாங்கிக் கொண்டு திருமந்திரத்தை ஓதினார்.

அவ்வாறு ஓம் நமோ நாராயணா என்ற திருமந்திரத்தைத் தெரிந்து கொண்ட அடுத்த கணமே, இத்திருக்கோயில் கோபுரம் மீது ஏறி நின்று கொண்டு, அந்த ஊர் மக்கள் அனைவரையும் இராமனுஜர் வரவழைத்தார். மக்களே,"ஓம் நமோ நாராயணா"என அனைவரும் மனதாரக் கூறுங்கள். நீங்கள் அனைவரும் சொர்க்கம் செல்லலாம்" எனக் கூறலானார்.

இதனைக் கேள்வியுற்ற திருக்கோட்டியூர் நம்பிகள் இராமனுஜரிடம் வந்து, எனக்குத் தந்த சத்தியத்தை மீறி, நீ இதுபோல செய்யலாமா எனக் கேட்டார். நான் ஒருவன் நரகம் சென்றாலும் பரவாயில்லை. இம்மந்திரம் சொல்லும் மானிடர்கள் அனைவரும் சொர்க்கம் சென்றாலே எனக்கு மகிழ்ச்சி எனக் கூறியதைக் கேட்டதும் இராமானுஜரைத் கட்டித் தழுவிக் கொண்டு, எங்கள் எல்லோருக்கும் மேலானவர் நீர் எனப் போற்றி, எம்பெருமானார் என வாழ்த்தி அருளினார்.

இறைவன் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டை, மனிதர்களுக்குள் ஏற்றத் தாழ்வு இல்லை என்ற சமத்துவ கருத்தை உருவாக்கியவர் இராமானுஜர். அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் அனைவரும் ஒன்றே என்று ஈவெரா பெரியாருக்கு பல நூற்றாண்டு முன்னரே இராமனுஜர் சொல்லியதோடு நில்லாமல் அதனைச் செயலிலும் எண்பித்துக் காட்டிய சமூக சீர்திருத்தக்காரர்.

மேலே கூறியவாறு முதலாம் திருமொழி முதல் பத்தில் பெரியாழ்வார் கண்ணனின் திருஅவதாரச் சிறப்பைப் பாடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணமாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவிடக்
கண்ணன் முற்றம் கலந்து அளறாயிற்றே. (முதலாம் திருமொழி - பாடல் 1)
இப்போது பாட்டின் பொருளைப் பார்ப்போம்.

வண்ணமாடங்கள் சூழ் திருக்கோட்டியூர் - அழகிய நுணுக்கமான வேலைப்பாடுகளமைந்த மாளிகைகள் நிறைந்த திருக்கோட்டியூர்,

கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில் - கண்ணன், கேசவன், நம்பி பிறந்தினில் அதாவது, அழகிய ஒளி நிறைந்த கண்களை உடையவனே, கேசி என்னும் குதிரை வடிவில் வந்த அசுரனை வதம் புரிந்தவனே, கேசவா, அண்டக் குலத்துக்கதிபதியானவனே! நீ திருவவதாரம் புரிந்த கோகுலமானது, கண்ணன் - ஒளி நிறைந்த கண்களை உடையவன், கேசவன் - கேசி என்னும் குதிரை வடிவில் இருந்த அசுரனை வதம் புரிந்தவன். கிரு'ணாவதாரத்தில், கண்ணனைக் கொல்வதற்காகக் கேசி என்னும் அசுரனை அனுப்பினான். ஆனால், கண்ணன் அந்த அசுரனை வதம் புரிந்து கேசவன் என்னும் பெயர் பெற்றான்.

பிறந்தினில் - ஈனுதல், இல் - இல்லம், மனை, வீடு - கண்ணன் பிறந்த கோகுலத்தை இங்கு குறிக்கிறது. கண்ணன் பிறந்தது மதுரா நகரின் சிறைச்சாலையில் என்றாலும் அது யசோதாவுக்குத் தெரியாது. அவள் கண்ணன் தனக்குப் பிறந்த குழந்தை என்றே நினைத்திருந்தாள்.

எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவிட - கோகுலத்தில் கண்ணன் பிறந்த நன்னாளை முன்னிட்டு ஆயர்களனைவரும் நறுமண எண்ணெயையும் வண்ணப் பொடிகளையும் எதிர்படுவோர் அனைவர் மேலும் ஒருவர் மேல் ஒருவர் தூவி மகிழ்ச்சி ஆரவாரம் புரிந்தனர். (வளரும்)●

## கொழும்பில் சங்கம் வீதி

சுமார் ஒரு வருடகால இழுபறிக்குப் பின்னர் கொழும்பு வெள்ளவத்தையில் தமிழ்ச் சங்கம் அமைந்துள்ள 57வது ஒழுங்கை, 'சங்கம் வீதி' என்று கடந்த மாதம் பெயர் மாற்றப்பட்டது. எவ்வாறோ 'சங்கம்' என்பதற்கு முன்னால் 'தமிழ்' என்பது இடம்பெறமல் பார்த்துக் கொண்டார்கள் ஆட்சியாளர்கள். அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, ஆளுனர் அலவி மௌலானா, மேயர் முஸம்மில் ஆகியோர் கலந்து கொண்ட பெயர்ப்பலகை நீக்க வைபவத்தில் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் எவரும் பங்கேற்கவில்லை. கொழும்பு மாநகர உறுப்பினர் கங்கைவேணியனின் முயற்சியால் இப்பெயர் சூட்டுதல் இடம்பெற்றது. இந்நிகழ்வில், கங்கைவேணியன் சார்ந்த கட்சியின் தலைவர் மனோ கணேசன் கூட பங்கேற்கவில்லை.

## 'வானொலி ஊடகவியல்' நூல் வெளியீடு

எழுத்தாளரும் கல்வியியலாளருமான 'பெரும்புலவர்' மொகமட் ஹன்சீர் எழுதிய 'வானொலி ஊடகவியல்' நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 23ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3:30 மணிக்கு ஸ்காபரோ சிவிக் சென்டர் கவுன்சில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எழுத்துலக நண்பர்கள் ஆர்வலர்கள் அனைவரையும் விழாவிற்கு வருகை தருமாறு நூலாசிரியர் வேண்டுகின்றார். மேலதிக விபரங்களுக்கு நூலாசிரியருடன் 647 522 1357 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

## உலக அகதிகள் தொகை இரட்டிப்பாக அதிகரிப்பு

உலகிலுள்ள அகதிகளின் தொகை தற்போது இரட்டிப்பாகியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் அறிவித்துள்ளது. 2004ம் ஆண்டில் 15 மில்லியனாகவிருந்த அகதிகள் தொகை இந்த வருடம் 35.6 மில்லியனாகியுள்ளது. இது, கனடிய சனத்தொகைக்கு நிகரானது. உலகில் அதிகளவிலான அகதிகள் வாழும் வலயமாக ஆசியா காணப்படுவதாக இந்த அறிக்கை கூறுகின்றது.

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank®
You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்





- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY
www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

*Chapel Ridge*
FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS
8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng
Funeral Counsellor

**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**
Funeral Counsellor

**416-431-3600** Ext:2






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உங்களுக்குத் தெரியும்,
தம்பிக்கையுடனான தரமான சேவைகள்..

PRO MAR Ltd.

- Corporate Awards
- Promotional Products
- Laser Engraving
- Pad Printing
- Silk Screening

*Vivek Subra*
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

Put your logo on anything!

One stop for all your promotional needs.




PRO MAR Ltd.
416 898 4846
vivekpromar@gmail.com

வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

*Why think so long...?*



- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days

Mortgages & loans arrangements

Vivek Subramaniam
Sales Representative
416- 898 4846

Homelife/Future
Realty Inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated







# கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9
(416) 288-1419

சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கர்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கர்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அறலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

Fancy Florist




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இங்கிலாந்தை திட்டித் தீர்க்கும் ரசிகர்கள்!

இங்கிலாந்து அணி உலகக்கிண்ண தொடரில் இருந்து வெளியேறியதைத் தொடர்ந்து ஊடகங்களும், ரசிகர்களும் இங்கிலாந்து அணியை திட்டிவருகின்றனர்.

பிரேசிலில் நடைபெற்று வரும் 20வது உலகக்கிண்ண கால்பந்து போட்டியில் இங்கிலாந்து அணி இதுவரை 2 ஆட்டங்களில் விளையாடியுள்ளது.

இந்தப் 2 போட்டிகளிலும் தோல்வியடைந்து முதல் சுற்றிலேயே இங்கிலாந்து அணி பரிதாபமாக வெளியேறியுள்ளது.

முதல் போட்டியில் இங்கிலாந்து, இத்தாலியை எதிர்கொண்டது. அதில் 1-2 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து வீழ்ந்தது.

2வது போட்டியில் உருகுவேயை எதிர்கொண்ட இங்கிலாந்து அந்தப் போட்டியிலும் 1-2 என்ற கோல் கணக்கில் தோற்றது. இந்நிலையில் நேற்று இத்தாலியும் கோஸ்டாரிகாவும் மோதின.

அப்போட்டியில் கோஸ்டாரிகா வெற்றி பெற்றால் இங்கிலாந்து போட்டியில் இருந்து வெளியேற்றப்படும். அதே சமயம் இத்தாலி வெற்றி பெற்றால் இங்கிலாந்து அணிக்கு அடுத்த சுற்றுக்கு சிறிது வாய்ப்பு இருக்கும் என்ற நிலை இருந்தது.

ஆனால் கோஸ்டாரிகாவிடம் இத்தாலி தோல்வியை தழுவியதால் இங்கிலாந்து அணி பரிதாபமாக உலகக்கிண்ண போட்டிகளில் இருந்து வெளியேற்றப்பட்டு விட்டது.


1958 ஆம் ஆண்டுக்கு பின்னர் இங்கிலாந்து அணி முதல் முறையாக உலகக்கிண்ண கால்பந்து போட்டியின் முதல் சுற்றிலேயே தோல்வியடைந்து வெளியேறியுள்ளது.

இதைத் தொடர்ந்து அந்நாட்டு ஊடகங்களும், ரசிகர்களும் இங்கிலாந்து அணி ஒரு முட்டாள் அணி, கடுப்பேற்றும் அணி என்று



எஸ். கணேஷ்

# FIFA - 2014 உலகக்கிண்ணம்




திட்டிவருகின்றனர். ஏற்கெனவே நடப்பு சாம்பியனான ஸ்பெயினும் முதல் சுற்றில் அடுத்தடுத்து தோல்வியைத் தழுவி வெளியேறியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்பெயின் வெளியேற காரணம் என்ன? நடப்பு சாம்பியன் ஸ்பெயின் நெதர்லாந்துடன் தோற்ற நிலையில், சிலியிடம் 2-0 என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்து உலகக்கிண்ண போட்டிகளில் இருந்து வெளியேறியது.

2010ம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவில் நடந்த உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டிகளில் ஸ்பெயின் அசத்தலாக விளையாடி கிண்ணத்தை வென்றது.

ஆனால் தற்போது பிரேசிலில் நடந்து வரும் உலகக்கிண்ண போட்டிகளில் ஸ்பெயின் தொடக்கத்தில் இருந்தே மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.

2010ம் ஆண்டு நடந்த உலகக்கிண்ண போட்டிகளிலும் சரி, யூரோ 2012 போட்டிகளிலும் சரி ஸ்பெயினின் தற்காப்பு ஆட்டம் அசத்தலாக இருந்தது.

ஆனால் 2014ம் ஆண்டு உலகக்கிண்ண போட்டிகளில் ஸ்பெயினின் தற்காப்பு ஆட்டம் சரியில்லை. தற்காப்பு ஆட்டம் சரியில்லாததால் 2 போட்டிகளில் எதிர் அணிகளை 7 கோல்கள் அடிக்கவிட்டுள்ளது.

நெதர்லாந்திடம் தோல்வி அடைந்த பிறகு ஸ்பெயின் அணியின் பயிற்சியாளர் ஜாவி ஹெர்னான்டஸ் மற்றும் ஜெரார்ட் பிக் ஆகியோரை நீக்கிவிட்டு பெட்ரோ ரோட்ரிகஸ், ஜாவி மார்டினஸ் ஆகியோரை அணியில் சேர்த்தார்.

மேலும் சிறப்பாக விளையாடும் கோகே காலதாமதமாக அணியில் சேர்க்கப்பட்டார். ஐகர் கசிலாஸ் மீது அதிக நம்பிக்கை வைத்தது மிகப் பெரிய தவறாகிவிட்டது.

பழைய ஆட்ட முறைகளால் முன்பு வெற்றி கிடைத்திருந்தாலும், தற்போது அது உதவவில்லை. காலத்திற்கேற்ப புதிய விளையாட்டு முறைகளை பின்பற்றாததும் ஸ்பெயின் படுதோல்வி அடைந்ததற்கு ஒரு காரணம்.

பிரேசிலைச் சேர்ந்த காஸ்டா தங்கள் நாட்டு ஸ்டைலை பின்பற்ற வைக்க ஸ்பெயின் எந்த முயற்சியும் செய்யவில்லை.

சிலியுடனான போட்டியின் போது காஸ்டா திணறிவிட்டார். அதனால் முன்வரிசையில் விளையாடிய டீகோ காஸ்டாவை தெரிவு செய்தது தவறாகிவிட்டது.●

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •
Scholarship Plan [RESP]
JRB Universal Inc.
Almost All Services Available
647 289 6164

R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.
Any Referral Service
• Credit Counseling • Accounting & Tax Services •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தமான ஒரு வீடு உங்கள் வாழ்க்கையின் மிகப்பெரியதோர் முதலீடு

## வீடு வாங்க விற்க



### ஈசன் குலசேகரம்
Sales Representative

**416 835 1700**

info@esanhomes.com

- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- வியாபார நிலையங்கள்
- காணி முதலீடுகள்
- வாங்குதல் - விற்றல் மற்றும்
- வாடகைக்கு கொடுக்கவும் - பெறுவதற்கும்

### விக்கி வேலாயுதன்
Sales Representative

**416 457 7162**

vvelauthan@yahoo.com

RE/MAX

RE/MAX Vision Realty Inc., Brokerage



அனைத்துக்குமான ஆலோசனைகளுக்கும்
நம்பிக்கையான சேவைகளுக்கும் நாடுங்கள்..

**Office: 416-321-2228 Fax: 416-321-0002**

www.esanhomes.com

**2210 Markham Road # 1 , Toronto, ON M1B5V6**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R & S
AUTO SALES
Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

36 வருட அனுபவம்



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha

R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
3030 Markham Road
Scarborough, ON
416-412-3838
416-836-5825



எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

87

இத்தொடர் இம்முறை எல்லோருக்கும் நன்கு தெரிந்த Walmart நிறுவனம் பற்றி விபரமாக எடுத்துக் கூறுகின்றது.

இந்த நிறுவனத்தினை ஆரம்பித்தவர் Sam Walton என்பவராவார். இவர் 1918ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள Oklahoma என்னும் இடத்தில் பிறந்தார். இவர் தனது 24ஆவது வயதில் (1942இல்) இராணுவத்தில் சேர்ந்து 3 ஆண்டுகள் பணியாற்றிய பின்னர், 1945ஆம் ஆண்டு விலகினார். 1945 ஆம் ஆண்டிலிருந்து 1962ஆம் ஆண்டுவரை பற்பல சிறிய வியாபார முயற்சியில் ஈடுபட்டு 1962ஆம் ஆண்டு 'Walmart' என்னும் நிறுவனத்தை ஆரம்பித்தார்.

இப்படியாக இவர் ஆரம்பித்த நிறுவனம் ஏறத்தாழ 5 ஆண்டுகளில் அதாவது 1967ஆம் ஆண்டு 24 விற்பனை நிலையங்களைக் கொண்டதாக அமெரிக்காவில் வளர்ச்சி கண்டது. அப்பொழுது இதன் விற்பனை வருமானம் 12.7 மில்லியன் டாலர்களாக இருந்திருக்கிறது.

1969ஆம் ஆண்டு இது பங்குதாரர்களைக் கொண்டஒரு (Public Company) நிறுவனமாக உருமாற்றம் பெற்றது. 1972ஆம் ஆண்டு நியூயோர்க் பங்குச் சந்தையில் பதிவாகியது. அப்பொழுது இது 51 விற்பனை நிலையங்களைக் கொண்டதாகவும், விற்பனை வருமானம் 78 மில்லியன் டாலர்களாக வளர்ச்சியடைந்தது. ஆரம்பத்தில் இதன் பங்கின் விலை 16.50 டாலராகக் காணப்பட்டது. தற்பொழுது June 2014 இதன் விலை 75 டாலருக்கும், 77 டாலருக்கும் இடைப்பட்டதாகக் காணப்படுகிறது.

1980ஆம் ஆண்டுகாலப் பகுதியில் இது 276 விற்பனை நிலையங்களைக் கொண்டதாகவும், இதன் விற்பனை ஒரு பில்லியன் டாலர்களாகவும் இருந்தது. 1990ஆம் ஆண்டு அமெரிக்காவின் மிகச் சிறந்த விற்பனை நிறுவனமாகவும், மலிவாக பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் ஒரு நிறுவனமாகவும் வளர்ச்சி கண்டது. 1991ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கு வெளியே தனது முதலாவது கிளையை மெக்சிக்கோவில் ஆரம்பித்தது.

இதனை ஆரம்பித்த Sam Walton தனது 74ஆவது வயதில் 1962ஆம் ஆண்டு மரணமடைந்தார். எனினும், அவர் ஆரம்பித்த நிறுவனம் வளர்ச்சி பெற்றுக்கொண்டே செல்கிறது.

1994 ஆம் ஆண்டுமார்ச் மாதம் 17ஆந் திகதி Walmart நிறுவனம் கனடாவில் கால்பதித்த தினமாகும். இதற்கு முன்னர் Woolco நிறுவனம் நடத்திவந்த 122 இடங்களை இது தனதாக்கிக்கொண்டு, தனது வியாபார நடவடிக்கையினை ஆரம்பித்தது. இந்த வருடத்துடன் இது கனடாவில் 20 ஆண்டுநிறைவைக் கொண்டாடுகின்றது. கனடாவில் இன்று இது 390 கிளைகளைக் கொண்டு 91,477 பேர் தொழில்பார்க்கும் நிறுவனமாக உள்ளது.

1996ஆம் ஆண்டு இது சீனாவில் கால்பதித்தது. தற்பொழுது அங்கு ஏறத்தாழ 400க்கு மேற்பட்ட நிலையங்களை நடத்திவருகின்றது. மேலும் 110 நிலையங்களை 2014ஆம் ஆண்டுக்கும் 2016ஆம் ஆண்டுக்கும் இடையில் ஆரம்பிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது.

பிறேசில் (Brazil) நாட்டில் 556 கிளைகளைக் கொண்டுள்ளது. இந்த நாடு தென் அமெரிக்கா கண்டத்தில பெருமளவு நிலப்பரப்பளவைக் கொண்ட நாடு. இங்கு இதன் முதலாவதுகிளை 1995ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகக் கூறப்படுகிறது. இன்று 73,881 பேர் வேலைபார்க்கும் நிறுவனமாக இருக்கின்றது. இதேபோன்று ஆர்ஜென்ரீனாவில் 105 கிளைகளையும், சிலிநாட்டில் 386 கிளைகளையும், இங்கிலாந்தில் 577 கிளைகளையும் இந்நிறுவனம் கொண்டுள்ளது.

இந்தியாவில் இந்நிறுவனம் முழுமையாகக் காலடி எடுத்துவைக்க முயற்சிக்கின்றபோதும், தற்பொழுது 20 கிளைகள் மொத்த வியாபார நிறுவனமாக செயல்பட்டு வருகின்றது. இது இந்தியாவுக்குள் முழுமையாக வந்தால், பல்வேறு சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் சிறிய வர்த்தகம் பாதிக்கப்படும் என்கின்ற கருத்து நிலவிவருவதால் இதற்கு பல எதிர்ப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இருப்பினும், தற்போது பதவியேற்றிருக்கும் மத்திய அரசின் தாராள பொருளாதாரக் கொள்கையின் தாக்கம் எப்படி அமையும்' என்பதனைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டியுள்ளது.

இவ்வாறு சிறிய நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்ட Walmart நிறுவனம், இன்று 27 உலகநாடுகளில் 11,000க்கு மேற்பட்ட விற்பனை நிலையங்களைக் கொண்டதும், 220,000 பணியாளர்களைக் கொண்டதுமான பல்தேசியக் கம்பனியாக மாறியுள்ளது.

இவ்வாறான பல்தேசியக் கம்பனிகள் சிலநாடுகளில் அந்தந்த நாடுகளில் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளை மறைமுகமாகத் தீர்மானிக்கும் சக்திகளாக மாறியுள்ளன. இவைபற்றி இனிவரும் தொடர் கட்டுரைகளில் எவ்வாறு எனப் பார்க்கலாம்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE
Education Funds

**RESP SAVINGS PLAN**

**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax

Small Business Income Tax

Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

**416. 841. 1866**
**416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com

## இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வழங்குமாறு கனடாவிடம் அமெரிக்கா கோரிக்கை

கனடாவில் அகதிகளாகவுள்ள இலங்கையர்களுக்குக் குடியுரிமை வழங்குவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு கனடிய அரசாங்கத்திடம் அமெரிக்கா வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் இலக்கு வைத்து நடத்தப்பட்ட ஆட்கடத்தலால், இலங்கையர்களும் ஏனைய நாடுகளைச் சேத்ந்தவர்களும் இன்னும் குடியுரிமை வழங்கப்படாமல் உள்ளனர். இவர்களுக்கு விரைவாகக் குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்று அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் கேட்டுள்ளது.

## பிரஜாவுரிமைச் சட்ட புதிய மாற்றங்களுக்கு பலமான எதிர்ப்பு

கனடாவின் புதிய பிரஜாவுரிமைச் சட்டத்துக்கு உள்நாட்டின் பல மட்டங்களிலிருந்தும் பலமான எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. பிரபல சட்டவாளர்கள், சட்டவாளர்கள் அமைப்புகள், சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமை நிறுவனங்கள் என்பன இது தொடர்பான தமது கருத்துகளை வெளிப்படுத்தி வருகின்றனர் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்க நீண்ட கால வாழ்விட கட்டுப்பாடு விதிப்பது, மொழிப் பரீட்சையை இறுக்கமாக்குவது போன்ற பாரபட்ச நடவடிக்கைளால் கனடிய பிரஜாவுரிமையின் மதிப்பு இறக்கப்படுகின்றது என்ற வாதத்தைப் பலரும் முன்வைத்துள்ளனர். பிரஜாவுரிமையை மீளப்பெறும் அதிகாரம் புதிய சட்டத்தில் இடம்பெற்றிருப்பதையும் பலர் தவறான செயற்பாடெனச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

## முதலில் மாம்பழம் பின்னர் வெற்றிலை

மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தது தெரிந்ததே. இப்போது இந்திய வெற்றிலைகளுக்குத் ஐரோப்பிய ஒன்றியம் தடை விதத்துள்ளது. மேலும் பல இந்திய பொருட்கள் விரைவில் தடை செய்யப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

**The Children's Education Trust of Canada**
offered to the public by

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற
சிவா
கணபதிப்பிள்ளை
அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!

Siva Kanapathypillai
Dealing Representative

**418 899 6044**

email
s.kanapathypillai@cefi.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


9வது வருடமாக
"எங்கள் வானொலி, மக்கள் வானொலி"
கனடியத் தமிழ் வானொலி
CTR
கனேடியா தமிழ் வானொலி
CANADIAN TAMIL RADIO
வழங்கும்
நட்சத்திர விழா 2014
ஜூலை 12,13 சனி, ஞாயிறு இரு நாட்கள்
கலைநிகழ்ச்சிகள் ★ தமிழர் விளையாட்டுக்கள் ★ பண்பாட்டு நிகழ்வுகள் ★ வர்த்தக-உணவுச் சாவடிகள்
மண்ணையும் மனிதர்களையும் நேசிப்போம்
FIFA WORLD CUP FINAL AND 3RD PLACE
[LIVE]
Watch on
FIFA WORLD CUP Brasil
July 12 & 13
LARGE SCREEN
'FIFA' உலகக்கோப்பை
உதைபந்தாட்டம் [LIVE]
இறுதிச்சுற்றும் 3ஆம் இடமும்
பிரமாண்டமான திரையில்
காணத் தவறாதீர்கள்!!!
Star Festival
வாணம்பாடியின்..
'மண்ணின் சந்தங்கள்'
பனிவிழும் தேசத்தில், தாயக நினைவுகளை மீட்கும் ஒரே ஒரு பிரமாண்ட மக்கள் நிகழ்வு
agni
'இன்னிசை இரவுகள்'
MARKHAM FAIR GROUND
10801 McCowan Road, Markham ON
MARKHAM FAIR
தொடர்புகளுக்கு:
416 754 3223
www.ctr24.com
contact@ctr24.com

# அனுபவத்தையும் முதுமையையும்..

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி என்ன செய்வேன் என்று ஏக்கம் ஏற்பட்டதா
பதில்: கவலை இருந்தது, ஏக்கம் இருந்தது. ஆனால் இரண்டு கால்கள் இல்லாமல் பலர் வாழ்கிறார்களே; நான் அதிர்ஷ்டசாலி என்று எனது இயல்பு வாழ்க்கைக்கு தயாராகி இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து, இலங்கை, இத்தாலி என்று நாடுகள் சென்று எதுவித கஷ்டமுமின்றி நண்பர்கள், உறவினர்களை சந்தித்து வந்தேன். இதற்கு எனது மனைவி பிள்ளைகள் மருமக்கள் உறுதுணையாக என்றும் இருந்தார்கள். பத்து ஆண்டுகள் மகிழ்வாகக் கழித்தேன். ஒருநாள் எனது Nephrologist உங்கள் சிறுநீரகம் செயற்பாடு 20 வீதமாகக் குறைந்துவிட்டது.



செயற்கையாக உங்கள் குருதி சுத்திகரிப்பை செய்ய வேண்டுமென்றார். எதையும் எனது நலன் கருதி செய்கிறார்கள். வைத்தியசாலை சென்று டையாலிஸிஸ் சென்று வருகிறேன். சிறுநீரக தானம் கிடைத்தாலன்றி இது வாழ்நாள் நிகழ்வு என்பதையும் உணர்ந்தேன்.

கேள்வி: குருதி சுத்திகரிப்பு செய்ய எடுக்கும் நேரம் எவ்வளவு? அந்த நேரத்தில் நீங்கள் என்ன செய்வீர்கள்?
பதில்: சக்கர நாற்காலி போக்குவரத்து வாகனம் வந்து என்னைக் கூட்டிச் செல்லும். சுத்திகரிப்பு 3 மணித்தியாலம் ஆகும். வீடு திரும்பிச் செல்ல அதே வாகனம் வரும். எல்லாமாக 5 மணித்தியாலங்கள் திங்கள், புதன், வெள்ளி என்று நடைபெறும். இங்கு வெளிவரும் வார மாதாந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிப்பேன். அங்கு இருக்கும் தொலைக்காட்சி பார்ப்பேன். ஒருமுறை சுத்திகரிப்பு நடக்கும்போது மாரடைப்பு ஏற்பட்டு என்னை உடனே அவசர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு சென்று மரணத்தில் இருந்து வைத்தியர்கள் மீட்டார்கள். சில மாதங்களில் எனது இடது கால் சின்னி விரலில் ஏற்பட்ட காயம் மாறாது இடது பாதம் உணர்வற்ற நிலைக்கு வந்தது. இடது காலுக்கு இரத்தத்தடை இருப்பதாக Angioplasty செய்யப்பட்டது. இருந்தும் நிலைமை மோசமாகி காலின் கீழ் பாகங்கள் நிறம் மாறி வலது கால் போல் gargreme ஆகியதும் கால் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு இடது காலையும் முழங்காலுக்குக் கீழ் இழந்து ஸ்காபரோ வைத்தியசாலையிலிருந்து Provident Health Care Centre க்கு அனுப்பினார்கள். எனது மன துணிச்சலையும், சாதக சிந்தனையையும் இந்த நிறுவன நிர்வாகம் தனது மாதாந்த வெளியீட்டில் பாராட்டி படத்துடன் பிரசுரித்தனர். இரண்டு கால் இழப்புக்கும் நான் முன்கூட்டியே சம்மதம் தெரிவித்தபடியால் முழங்காலுக்குக் கீழ் வெட்டப்பட்டு பொய்க்கால் போடுவதற்கும், போட்டபின் walker உடன் நடப்பதற்கும் முடிகிறது. இவை தவிர எனது கண்பார்வை குறைவதற்கு Cataract காரணம் என்று இரு கண்களுக்கும் சத்திரசிகிச்சை மூலம் கண்வில்லைகள் பொருத்தப்பட்டது. செவிப்புலன் பாதிப்பை Hearing Aid மூலம் நிவர்த்தி செய்கிறேன்.

கேள்வி: எல்லாவற்றையும் ஒழுங்காகவும், திட்டவட்டமாகவும் கூறுகிறீர்கள். வேதனைகள், சோதனைகள், பாதிப்புகள், சிரமங்கள் பலவற்றைச் சந்தித்தும் நீங்கள் இன்னும் இழக்காமல் இருப்பது உங்கள் தன்னம்பிக்கையும் புன்னகை ததும்பும் முகமும் ஞாபகசக்தியும். உங்கள் பொழுதை எப்படிக் கழிக்கிறீர்கள்?
பதில்: நான் எனது தலையையும் ஞாபகசக்தியையும் இன்னும் இழக்கவில்லை. தலை தப்பியது தம்பிரான் செயல். பழைய நினைவுகளை மீட்டு மகிழ்கிறேன். பொழுது பற்றிக் கேட்டீர்கள். கிழமையில் மூன்று நாட்கள் உடற்பயிற்சி, மற்ற மூன்று நாட்கள் சுத்திகரிப்பு, மூன்று காலைகள் நடைப்பயிற்சி. நல்ல உற்சாகம் என்றால் கைவேலைகள், பூக்கள் செய்தல், Shell ornament செய்தல், Drawing and painting, பேரப் பிள்ளைகள் பிறந்தநாள் கொண்டாட்டம், பள்ளிக்கூட நிகழ்வு, உறவினர், நண்பர்கள், கல்யாண வீடுகளுக்குச் செல்வேன். ஆலயங்கள் தூர இடங்களுக்குச் செல்லும்போது பிள்ளைகளுடன் நானும் இணைவேன். முதியோர் சங்க நிர்வாகக் கூட்டங்களுக்குப் போவேன். எமது கிராமத்தவர் ஒன்றியத்தின் தலைவராகச் செயலாற்றி இப்பொழுது போசகராக இருக்கிறேன். வைத்தீஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்க போசகராக இருந்து அவர்களின் நிகழ்வுகளில் பங்குபற்றுவேன்.

கேள்வி: இவ்வளவு வேலைப் பளுவுடன் வாழும் உங்களிடம் பொழுது போக்கு என்ற கேள்வி கேட்டது எனது தப்பு. இறுதியாக என்ன கூற விரும்புகிறீர்கள்?
பதில்: என்னைப் பொறுத்தவரை நான் கனடா நாட்டிற்கு செய்ததிலும் பன்மடங்கு நன்மைகளையும், வசதிகளையும் கனடா எனக்குச் செய்து வருகின்றது. இதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ கூடாது. எனக்கு வந்த பிணிகளுக்கு எந்த நாடு இப்படி ஈடு கொடுக்கிறது.



மூன்று பிரதான சத்திரசிகிச்சை, வாழ்நாள் இரத்த சுத்திகரிப்பு, சக்கர நாற்காலி, நடக்கும் கருவி, ஆஸ்பத்திரி படுக்கை, குளிக்கும் இருக்கை, கைத்தடி. ஒரு தொலைபேசி அழைப்பில் நான் தினமும் எடுக்கும் மருந்துகள் வீடு வந்து சேரும்.
பத்து ஆண்டுகள் இருவரும் தொழில் புரிந்தோம். 65 வயதானதும் வாழ்வாதாரமாக அடிப்படைத் தேவைகளுடன் வாழப்போதுமான முதியோர் பராமரிப்பு நிதி தருகிறார்கள். இந்த வருடம் எனது 80வது பிறந்த தினத்தையும் 50வது திருமண நாளையும் மனைவி, பிள்ளைகள் குடும்பங்களோடும், உறவினர் நண்பர்களுடனும் கொண்டாடி மகிழ்ந்தேன். அனுபவத்தையும், முதுமையையும் மதிக்கும் கனடாவை வணங்கி மதிக்கிறேன்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Prof. Marco Fiola Creates Canada's First On Line English -Tamil Legal Glossary

For separating couples, it's confusing enough to try to distinguish between shared custody and split custody in plain English. For people who must rely on, say, a Tamil interpreter to explain legal terms like those, it's an even bigger struggle, fraught with the possibility of big mistakes.

In response to a provincial report raising concerns about the quality of court interpretation and the lack of Tamil interpreters, a Ryerson University language professor has launched Canada's first English-Tamil legal glossary to fill the gap.

"In Toronto, we have more than 200 languages being spoken. We need to make sure both court interpreters and settlement agencies have a reliable, consistent and relevant resource to perform this work," said Marco Fiola, chair of Ryerson's department of languages, literatures and cultures.

"Translation and interpretation happen in the city on a daily basis, but the training opportunity focuses mainly on English and French and not on other languages." The launch of the free online glossary was welcomed within Toronto's Tamil Canadian community.

The English-Tamil glossary includes the 700 most commonly used legal concepts or terms, and is based on a similar interpretation tool between English and French. Similar resources, said Fiola, are already available in Chinese, Hindi, Punjabi, Russian and Spanish.

Covering terms from "absolute discharge" to the "Youth Criminal Justice Act," the online tool explains their definitions in Tamil, in detail. "This has to do with the whole credibility of our justice system," Fiola said. As to the example of child custody: "Shared custody and split custody may sound the same, but there is no real room for misinterpretation," he said, pointing out that "shared" means parents each have a share of time with their children, while "split" means the children will be separated to the custody of different parents.


Creation of the glossary was funded by the Law Foundation of Ontario in collaboration with Ryerson's law research centre and Tamil-speaking interpreters, translators and lawyers.

Fiola is also working on a French-Tamil version and developing a mobile app for the glossary.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# DR. ILLANGO & ASSOCIATES

## ORTHODONTICS, ORAL SURGERY, IMPLANT

Dental Office




New Location

**SCARBOROUGH**

3852 Finch Ave. East,
Suite 204 & 303
Scarborough, ON.
Tel: 416 292 7004

**BRAMPTON / MISSISSAUGA**

7920 Hurontario St.,
Unit 37
Brampton, ON
Tel: 905 457 1700

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classes




## Successful Real Estate Office With Over 300 Salespeople

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012

TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011

TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

★No Franchise Fees ★No Monthly Fees ★No Desk Fees

## International Award Winning Office

### Top 5th HomeLife Office In Canada-2012

- Atractive Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



**HOMELIFE /FUTURE REALTY INC.,** Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
Bus: 905.201.9977 | 416.264.0101

*Based on TREB data: 2012. (does not include independent or other franchisors). ©2012 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
Tel:416-568-4301


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org